# கங்கை கொண்ட சோழபுரம்

## அகழாய்வு அறிக்கை




பதிப்பாசிரியர்

முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர் இஆப.,

முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர்



தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை-600 008

# கங்கை கொண்ட சோழபுரம்

## அகழாய்வு அறிக்கை


பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர்

ஆசிரியர்கள்

முனைவர் **சீ. வசந்தி**
திரு. **ச. செல்வராஜ்**
திரு. **ச. பரணன்**
திரு. **கோ. அர்ச்சுணன்**



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
சென்னை- 600 008.

முதற்பதிப்பு : 2009
பதிப்பு எண். : 222
பிரதிகள் : 500

உரிமை
தொல்லியல் துறை
தமிழ்நாடு அரசு
எழும்பூர், சென்னை-600 008.

விலை : ரூ. 76/-

முன்அட்டை : அகழாய்வுக்குழியின் தோற்றம்
பின்அட்டை : கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயிலின் தோற்றம்

அச்சிட்டோர் : சென்னை அச்சக தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட்.,
6, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி,
சென்னை-600 005. போன் : 2844 6287

## உள்ளடக்கம்


| வ.எண். | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை | i |
| 2. | முன்னுரை | iii |
| 3. | கங்கை கொண்ட சோழபுரம் | 1 |
| 4. | அகழாய்வுப் பணி - 1980 முதல் 1996 வரை | 2 |
| 5. | மண் அடுக்குகள் | 6 |
| 6. | மண்மலை அகழாய்வு | 9 |
| 7. | கல்குளம் அகழாய்வு | 11 |
| 8. | சோழகங்கம் மதகு அகழாய்வு | 12 |
| 9. | அகழாய்வுப் பணி 2009 | 15 |
| 10. | தொல்பொருட்கள் | 19 |
| | அ. இரும்பு ஆணிகள் | |
| | ஆ. கூரை ஓடுகள் | |
| | இ. கெண்டி மூக்குகள் | |
| | ஈ. அலங்கரிக்கப்பட்ட கற்கள் | |
| | உ. அலங்காரப் பொருட்கள் (எலும்பு மற்றும் தந்தம்) | |
| | ஊ. குறுவாள் கைப்பிடி | |
| | எ. வளையல்கள் | |
| | ஏ. மணிகள் | |
| | ஐ. தூண்கள் பொருத்தும் பீடம் | |
| 11. | பானை ஓடுகள் | 23 |
| | சீன நாட்டுப் பானை ஓடுகள் | |
| | i) போர்சலைன் | |
| | ii) செலடைன் | |
| 12. | முடிவுரை | 28 |
| | பிற்சேர்க்கை | |
| | 1. சோழகங்கம் மதகு அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட கட்டமைப்பின் முழுத் தோற்றம் மற்றும் குறுக்குத் தோற்றம் | 30 |
| | 2. பானை ஓடுகளின் வகை | 32 |
| | 3. அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள் | |
| | 4. சுடுமண் பொம்மைகள் | |
| | 5. அலங்காரப் பொருட்கள் | |
| | 6. எசாலம் செப்பேடு குறிப்பு | 38 |
| | 7. நிழற்படங்கள் | 60 |

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இ.ஆ.ப.
முதன்மை செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சுசாலை,
சென்னை - 600 008.

# பதிப்புரை

தமிழகத்தின் வரலாற்றுப் பக்கங்களில் பொன்னெழுத்தில் எழுதப்பட்ட அரசர்களின் பெயர்கள் பல உண்டு. அம்மன்னர்களின் வெற்றி, தமிழ்ச் சமுதாயத்திற்கு அவர்கள் ஆற்றிய அரும் பணிகள் ஆகியவை அவர்களின் புகழை இன்றளவும் பறை சாற்றி வருகின்றன. தமிழகத்தை ஆண்ட மன்னர்களில் தலைசிறந்த மன்னன் முதலாம் இராஜராஜசோழன் (கி.பி. 985 - 1014) இவனது மகன் முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044).

*மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை*
*என்நோற்றான் கொல் எனும் சொல்.*

*குறள் - 70*

என்ற திருக்குறள் வரிகளுக்கு ஏற்ப தம் தந்தையே வியக்கும் வகையில் சிறந்த மன்னனாகத் திகழ்ந்தான். இம்மன்னன் தான் கங்கை வரைச் சென்று வந்த நிகழ்வினைப் போற்றும் வகையிலும், பல நாடுகளை வென்ற, வெற்றிக் களிப்பினை வெளிப்படுத்தும் வகையிலும் தனக்கென புதிதாகத் தலைநகரை நிர்மாணித்தான். அதற்கு கங்கை கொண்ட சோழபுரம் எனப் பெயரிட்டான். அதன் நினைவாக கங்கை கொண்டச் சோழீஸ்வரம் என்ற திருக்கோயிலும் கட்டினான்.

இவ்வூர் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து (கி.பி.1025 முதல்) தென்னகத்தின் தலைசிறந்த நகராக, சுமார் மூன்று நூற்றாண்டுகளாகத் திகழ்ந்திருந்தது. சோழ அரசர்களின் ஆட்சிப் பீடமாகத் திகழ்ந்த கங்கைகொண்ட சோழபுர நகரின் அடையாளமாகத் திகழ்பவை கோயிலும், மறைந்த அரண்மனையின் எச்சங்களும்தான்.

கங்கைகொண்ட சோழபுரத்தை அடுத்த உட்கோட்டை என்ற ஊரில் உள்ள மாளிகைமேடு என்ற இடத்திலிருந்து செங்கற்களை இப்பகுதி மக்கள் தங்களது வீடுகளுக்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். எனவே இப்பகுதியில் மாளிகை

இருந்ததற்கானச் சான்றினை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை 1980 ஆம் ஆண்டு மேற்பரப்பாய்வு மேற்கொண்டது.

மேற்பரப்பாய்வில் கட்டிடங்களின் பகுதிகளும் கிடைத்ததால் அவ்விடத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு 1980 முதல் 1996 வரை பல கட்டங்களாக 30 ஆய்வுக்குழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. மேலும், இவ்வூரைச் சுற்றியுள்ள மண்மலை, கல்குளம், சின்ன மாளிகைமேடு, குரவாலப்பர் கோயில், பொன்னேரியிலும் அகழாய்வு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2009 ஆம் ஆண்டு மேலும் பல புதிய சான்றுகளுடன் மாளிகையின் மறைந்த பகுதிகளையும் அகழியின் அமைப்பு ஆகியவற்றை அறியும் வகையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாளிகைமேடு, உட்கோட்டையில் நடத்தப்பட்ட அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களின் சிறப்புக் கண்காட்சி மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் அவர்களால் 19.7.2009 அன்று திறந்துவைக்கப்பட்டது. அக்கண்காட்சியில் அகழாய்வில் கிடைத்த அனைத்துத் தொல்பொருட்களும் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டது. தற்போது இவை அனைத்தும் கங்கைகொண்ட சோழபுரத்தில் இயங்கும் இத்துறையின் இராசேந்திர சோழன் அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் அகழாய்வு மற்றும் இங்கு கிடைத்த தொல்பொருட்கள் அனைத்தும் அனைவரும் பயனடையும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பணியில் ஈடுபட்ட அனைத்து தொழில்நுட்ப அலுவலர்களும் பாராட்டுக்குரியோர். அட்டைப்படத்தினை அழகுற வடிவமைத்த திரு. மு.த.ஸ்ரீதரன் பாராட்டுக்குரியவர். நிதி ஒதுக்கீடு செய்த தமிழக அரசிற்கும் இந்நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் : 3.6.2010 **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இஆப
சென்னை : சென்னை

# முன்னுரை

கங்கை கொண்ட சோழபுரம், அரியலூர் மாவட்டத்தில், ஜெயங்கொண்டம் வட்டத்தில் அமைந்துள்ள, வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் ஆகும். இங்குள்ள கங்கை கொண்ட சோழீஸ்வரர் கோயில் உலக மரபுரிமைச் (World Heritage Monument) சின்னமாக உலக நாடுகளுக்கான ஐ.நா. சபையின் அங்கமான யுனஸ்கோவால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. இக்கோயில் மத்திய தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டச் சின்னமாக பாதுகாத்து வரப்படுகின்றது.

விழுப்புரம் - கும்பகோணம் நெடுஞ்சாலையில் சேத்தியா தோப்பில் இருந்து 24 கி.மீ. தொலைவிலும், சென்னை - கும்பகோணம் சாலையில் சென்னையிலிருந்து 257 கி.மீ. தொலைவிலும் ஜெயங்கொண்டம் இணைப்பு சாலையில் இருந்து 2 கி.மீ. தூரம் மேற்கே சென்றால் கங்கை கொண்ட சோழபுரத்தை அடையலாம். அணைக்கரையிலிருந்து 9 கி.மீ தொலைவிலும், திருச்சியிலிருந்து 100 கி.மீ. தொலைவிலும், ஜெயங்கொண்டத்திலிருந்து 10 கி.மீ. தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. அகழாய்வு மேற்கொண்ட மாளிகைமேடு பகுதி கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தென்மேற்கில் உட்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ளது.

பிற்காலச் சோழ மன்னர்களின் தலைசிறந்த மன்னனாகக் கருதப்படுபவன் முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி. 985-1014), இவனது மகன் முதலாம் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1044), வடக்கில் கங்கை நதிவரைச் சென்று வெற்றி கொண்ட நிகழ்வினைப் போற்றும் வகையில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஊரினை நிர்மாணித்தான். இவ்வூர், முதல் இராசேந்திர சோழன் தோற்றுவித்த நாளிலிருந்து (கி.பி.1025 முதல்) சுமார் 250 ஆண்டுகள், தென்னகத்தின் தலைசிறந்த நகரமாகவும், மத்திய காலத் தென்னிந்தியாவின் வல்லரசு ஆகத்திகழ்ந்த சோழர்களின் தலைநகராகத் திகழ்ந்துள்ளது. இத்தகையப் பெருமை மிக்க நகரம் இருந்ததற்குச் சான்றாக இன்று திகழ்வது, கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில் மட்டுமே. கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அரண்மனையின் எச்சங்கள் கூட இல்லாது முற்றிலும் அழிக்கப்பட்ட மறைந்த நகராகத் தற்போது இவ்வூரில் உள்ள கட்டிடப்பகுதிகள் காணப்படுகின்றன. பொதுவாக தமிழக மன்னர்கள் தங்களது வாழ்விடங்களை களிமண், செங்கல், மரம் போன்ற அழியக் கூடிய பொருட்களைக் கொண்டு கட்டிக் கொண்டனர். ஆனால் தங்களது வழிபாடு இடங்களை உறுதியானக் கற்களைக் கொண்டு கட்டியதால் இன்றளவும் அவை நிலைத்துள்ளன.

**மறைந்த அரண்மனை**

கங்கை கொண்ட சோழபுரத்தை அடுத்துள்ள உட்கோட்டை என்ற ஊரில் உள்ள மாளிகை மேடு என்ற இடத்திலிருந்து அரண்மனை கோட்டை, கொத்தளங்கள் ஆகியவை தரைமட்டமாக இடிக்கப்பட்டிருக்க வேண்டும். இடிபாடுகளில் இருந்த செங்கற்களைக் கொண்டு இப்பகுதி மக்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்துள்ளனர். எனவே இப்பகுதியில் மாளிகை இருந்ததற்கானச் சான்றினை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை 1980-ஆம் ஆண்டு இப்பகுதியில் மேற்பரப்பாய்வினை மேற்கொண்டது.

மேற்பரப்பு ஆய்வில் தொல்பொருட்களும், கட்டிடங்களின் பகுதிகளும் கிடைத்ததால் அவ்விடத்தில் அகழாய்வு மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரம் உட்கோட்டை, மாளிகைமேட்டில் 1980, 1984, 1991, 1996 ஆகிய காலக்கட்டத்தில் 30 ஆய்வுக் குழிகளும், 2008-2009 ஆம் ஆண்டு 4 இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கங்கை கொண்ட சோழபுரத்தினைச் சுற்றியுள்ள மண்மலை, கல்குளம், சின்ன மாளிகைமேடு, குருவாலப்பர் கோயில் ஆகிய இடங்களிலும் சோழகங்கம் எனப்படும் பொன்னேரியிலும் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின் மூலம், தமிழகத்தில், மாளிகை அதாவது அரசர்களின் அரண்மனையின் எச்சங்கள் எவையும் இல்லாத நிலையில், சோழர்காலத்தில் அரண்மனைக் குறித்தும், அக்காலத்திய மதகு அமைப்புக் குறித்து அறியவும், கங்கை கொண்ட சோழபுரத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின் மூலம் மத்தியக் காலத் தமிழகத்தின் ஊர் அமைப்பு, அரண்மனை அமைப்பு ஆகியவற்றை வெளிப்படுத்த அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நகரம் மிகவும் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு கலை அழகுடன் ஒரு நகரத்திற்கு தேவையான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்நகரம் இரண்டு பெரும் மதில் சுவர்களை கொண்டுள்ளது. ஒன்று இராசேந்திர சோழன் மதில் என்றும் அடுத்தது உட்படை வீட்டுமதில் என்பதும் அறிய முடிகின்றது.

இராசேந்திர சோழனுக்குப் பின்னர் வாழ்ந்த மன்னர்கள் வீரமிகு செயல்கள் புரிந்த இடம் இப்பொழுது மண்ணோடு மண்ணாகி மண்மேடாக காட்சியளித்துக் கொண்டுள்ளது. அத்தகைய மண்மேட்டை தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை, மேற்பரப்பு ஆய்வும், பின்னர் பொறியாளர்களைக் கொண்டு காண்டூர் சர்வேயும் செய்து மண் மேடுகளையும், அங்கு மேற்பரப்பில் கிடைத்த தொல் பொருட்களையும் சேகரித்து குறிப்புகள் தயாரிக்கப்பட்டது.

இக்குறிப்பில் ஒரு பெரு நகரம் இருந்து அழிந்து பட்டிருத்தல் வேண்டும் என திட்டவட்டமாக அறியமுடிந்தது. ஏனெனில் மாளிகை மேடு, ஆயுதக் களம், யுத்தப் பள்ளம், சின்ன மாளிகை மேடு, சுண்ணாம்புக் குழி, மெய்காவல் புத்தூர், சோழகங்கம், கடாரங்கொண்டான், குறுவாலப்பர் கோயில், மண்மலை என எங்கு சென்று ஆய்வு மேற்கொண்டாலும் ஏராளமான உடைந்த செங்கற்களும், பானை ஓடுகளும், கூரை ஓடுகளும் தென்பட்டன. எனவே இப்பகுதியை முறைப்படி அறிவியல் துணையுடன் அகழாய்வை மேற்கொள்ளுதல் அவசியம் என முடிவு செய்யப்பட்டு இப்பகுதியை அகழாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டு 1980-ஆம் ஆண்டு சனவரி மாதம் அகழாய்வுப் பணி துவங்கப்பட்டது.

**முதலாம் இராசேந்திரனும் கங்கைகொண்டசோழபுரமும் :**

முதலாம் இராசேந்திர சோழனால் தோற்றுவிக்கப்பட்ட கங்கை கொண்ட சோழபுரம் தலைநகரும், கோயிலும் கி.பி. 11 - ஆம் நூற்றாண்டு தொடங்கி (கி.பி.1012-1044) கி.பி.13 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் மூன்றாம் இராசேந்திர சோழனின் காலத்தில் (கி.பி.1240-1279) தலைநகரும், மாளிகையும் பிற்காலப் பாண்டியர் படையெடுப்பால் அழிந்தது. எஞ்சியது கோயில் மட்டுமே. கங்கைகொண்ட சோழபுரம் மாளிகையில் 14 சோழ அரசர்கள் சுமார் 267 ஆண்டுகள் தொடர்ந்து நிலையான அரசாட்சி புரிந்துள்ளனர்.

முதலாம் பராந்தக சோழன் பாண்டியரை (கி.பி.10ல்) வெற்றி கொண்டான். தோற்ற பாண்டிய மன்னன் ஈழத்தில் தஞ்சம் அடைந்தான். பாண்டிய மகுடமான இந்திர ஆரத்தினை ஈழ நாட்டில் பதுக்கி வைத்தான். மதுரையும் ஈழமும் வெற்றி கொண்ட பராந்தக சோழனால் இந்திர ஆரத்தினை கைப்பற்ற முடியவில்லை. இதனை முதலாம் இராசேந்திர சோழன் கைப்பற்றியதை அவனின் மெய்க்கீர்த்தியில்,

*"பெருங்கடல் ஈழத்தரசர் தம்முடியும்*
*ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்*
*முன்னவர் பக்கல் தென்னவன் வைத்த*
*சுந்தரமுடியும் இந்திரன் ஆரமும்"*

காண்கிறோம்.

**வடதிசை கங்கையைத் தென்திசைக்குக் கொணர்தல்:**

வடதிசை கங்கையும், தென்திசை ஈழமும், குடதிசை மகோதையும், குணதிசை கடாரமும் முதலாம் இராசேந்திரனின் வெற்றி கொண்ட நாட்டு எல்லைகளாக இருந்தன. கங்கையினை வெற்றிக் கொண்டு அக்கங்கை நீரினைக் கொண்டுவந்து 'பொன்னேரி' எனும் சோழ கங்கை பேரேரியில் ஊற்றி நீர்மயமான

வெற்றிச்சின்னம் (ஜலஸ்தம்பம்) கண்டான் என திருவாலாங்காட்டுச் செப்பேட்டின் வடமொழி பகுதி கூறும்.

*"சோழ கங்கம் இதி க்யாதியா*
*ப்ரதிதந் நிஜமண்டலே*
*கங்கா ஜலமயந் தேவஹ*
*யஸ்தம்வம் வியதத்த ஸஹ"*

சங்கர சோழனுலாவில்,

*"காந்தரிக் கொப்பக் கடாரமும் கங்கையுங் கொண்*
*டேந்தரில் பீடத் திருந்தோனும்" - என்றும்*

மேலும்,

*.................... ........... "தாம்கொணர்ந்த*
*கங்கையின் நீர் தவிர நீருள் கவர்ந்தெல்லாம்*
*பங்கய நீரும் பணித்தற்பின்"* - என்றும் கூறும்.

குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில்,

*"........ வடதிசைக் கங்கையைத் தென்திசைக்*
*கொண்டு எழப் பண்டு கொண்டு"*

என ஒட்டக்கூத்தர் கூறியுள்ளார்.

இவரது குலோத்துங்கன் சோழனுலாவில்,

*"கங்கா நதியுங் கடாரமுங் கைவரச்*
*சிங்காதனத்திருந்த செம்பியர் கோன்"* என்கிறார்.

**கங்கை கொண்ட சோழீச்சுரம் குறித்த இலக்கிய, செப்பேட்டுச் செய்திகள் :**

தஞ்சையை அடுத்து மிக உயர்ந்த விமானம் உடைய கோயில் கங்கை கொண்ட சோழீச்சுரமே ஆகும். இக்கோயிலைக் கட்டிய முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1035 முன்கட்டப்பட்டது) கல்வெட்டுகள் இக்கோயிலில் ஏதுமில்லை. இராசேந்திர சோழனின் மூன்றாவது மகனான வீரராசேந்திரனின் 5-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டுதான் முதன் முதலில் இக்கோயிலில் வெட்டப்பட்டுள்ளது. சுமார் 216 வரிகள் கொண்ட நீண்ட அக்கல்வெட்டில் தன் தந்தை 23வது ஆட்சியாண்டில் வழங்கிய தானங்களையும், தன் தமையனான முதலாம் இராசாதிராசனின் 26, 30வது ஆட்சியாண்டில் வழங்கிய தானங்களையும் மற்றும் தான் வழங்கும் தானங்களையும் குறிப்பிடுகின்றான்.

மேலும் 'எசலாம்' செப்பேட்டில் இக்கோயில் இராசேந்திர சோழனால் கட்டப்பட்டது என்பதற்கான முதல் மற்றும் முதன்மை சான்றாக வடமொழி பகுதியில் குறிப்பிடும் செய்தி அமைந்துள்ளது. அதில் ''பகீரதன் ஆகாயக் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததுபோல், கங்கை நீரைச் சோழ நாட்டிற்குக் கொண்டுவந்து தெளித்து கங்கை கொண்ட சோழனால் பேரேரியை உருவாக்கியதுடன் கங்கைகொண்ட சோழபுரியையும் உருவாக்கினான். கங்கை கொண்ட சோழபுரியில் மகேஸ்வரனுக்குப் பெரிய கோயிலையும் இராசேந்திரன் கட்டினான்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கருவூர்த் தேவர் பாடிய திருவிசைப்பாவில், இக்கோயிலில் உறையும் சிவனைத் தவிர ''அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ?'' என்று வினவுகிறார். மேலும்

*''பாவியேன் ஆவியுள் புகுந்தென்*
*கண்ணின்நின் றகலான்''* என்றும்

''கன்னலே தேனே, அமுதமே கங்கை கொண்ட சோளேச் சரத்தானே'' என்றும் ''கருவூர் அறைந்த சொல் மாலை'' இதுவென்றும் பாடியுள்ளார்.

**கோயில் அமைப்பு :**

இப்பெருங்கோயிலின் விமானம் கீழே சதுரமாகவும், அதன் மேல் எண்பட்டை வடிவிலும், உச்சிப் பகுதி வட்ட வடிவிலும் அமைக்கப்பட்டு சிவலிங்க வடிவில் காட்சிதரும். இக்கோயில் வளாகத்தின் வடக்கிலும், தெற்கிலும் இருசிறிய கோயில்கள் அமைந்துள்ளன. அவை முறையே வடகைலாயம் என்றும் தென் கைலாயம் என்றும் கூறப்படும். வடகைலாய கோயிலில் பின்னாளில் அம்மன் கற்சிலை வைக்கப்பட்டு அம்மன் கோயிலாகவும் தென் கைலாயம் கற்சிலை ஏதுமின்றி சிதைந்தும் காணப்படுகிறது. இங்குள்ள கோஷ்ட கற்சிற்பங்கள் சில மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி கற்சிற்பத்தில் சண்டேசுவரர் உருவம் முக அமைப்பில் முதலாம் இராசேந்திர சோழனாக இருக்கக்கூடும் என்று கருதக்கூடிய அளவில் வடிக்கப்பட்டுள்ளது. தெற்கு கோஷ்டத்திலுள்ள ஆடவல்லான் கற்சிலை தஞ்சை பெரியகோயில் அமைந்துள்ள கற்சிலையினின்று வேறுபட்டு விளங்குகிறது. இங்குள்ள ஆடவல்லானின் கீழே காரைக்கால் அம்மையாரின் எலும்புருவம் காட்டப்பட்டுள்ளது. பெரிய புராணம் பாடிய சேக்கிழார் (காலம் சுமார் கி.பி. 12-13) இச்சிலையினைப் பார்த்துதான் காரைக்கால் அம்மையாரின் வரலாறு கூறும் பாடலில்,

***'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னடியை***
***மறவாமை வேண்டும் மகிழ்ந்துபாடி இன்னும் வேண்டும் நான்***
***இறைவா நீ ஆடும்போது உன்னடியின் கீழிருக்க'' என்று***

பாடினாரோ என வியக்க வைக்கும் வகையில் அமைந்துள்ளது.

கருவறையின் நேர் பின்புறம் மேற்கு கோஷ்டத்தில் பொதுவாக அடிமுடிகாணா அண்ணல் உருவமே காணப்படும். ஆனால் இங்கு செவ்வேள் உருவம் கற்சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. சோழ ஆட்சி எல்லையாக பெரிதும் போரிட்டு விரிவாக்கிய இராசேந்திர சோழன் தம் வாழ்நாளில் பெரும்பகுதியினைப் போர்க்களத்திலேயே கழித்தவன். முருகனும் போர் தெய்வம் எனவே அவன் சிலையினை கோஷ்டத்தில் அமைத்தானோ என எண்ணும் வகையில் அமைந்து உள்ளது. வடக்கு கோஷ்டத்தில் அமைந்துள்ள தாடியுடன் கூடிய பிரம்மாவின் கற்சிலை மிகவும் அழகுவாய்ந்தது ஆகும். மேலும் சரசுவதி, திருமகள், அரிஅரன், காமதகன மூர்த்தி, விஷ்ணு அனுகிரக மூர்த்தி, கங்காதரர், அடிமுடிகாணா அண்ணல், திருமால், காலாந்தகர், துர்கை, பைரவர் உமையொருபாகன், கணபதி, மற்றும் மிகப்பெரிய துவாரபாலகர்கள் சிலைகள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன.

வென்ற நாடுகளிலிருந்து போரின் வெற்றிச் சின்னமாக (WAR TROPHY) சாளுக்கிய நாட்டிலிருந்து இருபது கைகளுடன் திரிபங்க நிலையிலுள்ள துர்க்கை, ஒரே கல்லில் வடிக்கப்பட்ட நவக்கிரகம், வங்காள நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சரசுவதி, இவ்வூருக்கு அண்மையிலமைந்துள்ள மண்மேடு கிராமத்திலுள்ள துர்கை, வீராரெட்டித் தெருவிலுள்ள துர்கை, சலுப்பை கிராமத்திலுள்ள துர்கை, 'செங்கமேடு' கிராமத்திலுள்ள கலிங்க நாட்டுச் சிற்பங்களான பைரவர், பைரவி மற்றும் சோழர்கால துர்கை ஆகியனவும் (துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாகும்) இவ்வூருக்கு நான்கு எல்லையிலும் காவல் தெய்வமாக துர்க்கை திசைக்கொன்றாக இருந்துள்ளது.

முதலாம் இராசேந்திர சோழனால் வழிபடப்பெற்ற சேவலுடன் கூடிய முருகன், சோமாஸ் கந்தர், அதிகாரி நந்தி போன்ற செப்புத் திருமேனிகளும் இக்கோயிலில் உள்ளன.

**அரண்மனைக் குறித்து இலக்கிய கல்வெட்டின் மூலம் அறியப்படும் செய்திகள் :**

கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் உள்ள வீர இராசேந்திரனுடைய கல்வெட்டில் அரண்மனையின் பெயர் ''சோழ கேரளன் திருமாளிகை'' எனக் குறிக்கப்படுகிறது. இதுபோன்று முதற் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டில் இவ்வரண்மனையினை ''கங்கை கொண்ட சோழன் மாளிகை'' எனக் குறிப்பிடுகிறது. மேலும் இவ்வூர் கல்வெட்டிலிருந்து ஆதிபூமி, கீழைசோபானம், மாவலிவாணாதராஜன் பள்ளிக்கட்டில் என அரண்மனையின் பகுதிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அரண்மனையில் 'வெளி மேல் மண்டபம்' என்ற இடத்தில் 'பல்லவராயன்' இருக்கையிலிருந்து என பிறவெளியூர் கல்வெட்டுகளிலும் குறிப்புகள் கிடைக்கின்றன.

**இலக்கியத்தில் :**

தண்டியலங்காரப் பாடல் ஒன்றில்,

*''வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து*

*மண்குளிரச் சாயல் வளர்க்குமாந் - தண்கவிகை*

*கொங்கா ரலங்க லனபாயன் கொய் பொழில் சூழ்*

*கங்கா புரமாளிகை''* என்று கங்கை கொண்ட சோழபுரத்து அரண்மனையினை கங்கா புரமாளிகை எனக் கூறுகிறது.

கலிங்கத்துப்பரணியில் ஜெயங்கொண்டான்,

''கங்காபுரியன் மதிற் புறத்துக் கருதார் சிரம் போய் மிகவீழ'' என்று குறிப்பிடுகிறான். விக்ரமாங்க தேவசரிதம் எனும் வடமொழிநாளில் கங்கைகொண்ட சோழபுரம் ''கங்கா குண்டம்'' எனக் குறிப்பிடுகிறது.

''இராசராச சோழனுலாவில் ஒட்டக்கூத்தர்,

*''.................... வாயிலும்*

*மாளிகையும் சாலையும் ஆலயமும் மண்டபமும்*

*குளிகையும் எம்மருங்குந் தோரணமும் - சாளரமுந்*

*தெற்றியும் மாடமும் ஆடரங்கும் செய்குன்றும்*

*சுற்றிய பாங்கரும் தோன்றாமே'' - என்று மாளிகையில்*

சுற்றி தோரணங்களும், ஆடலரங்கும், செயற்கையாக செய்வித்த செய்குன்றுகளும் காணப்பட்டதாக கூறுகிறது.

**கல்வெட்டுகளில் :**

கல்வெட்டுகளிலிருந்து இராசேந்திரசோழன் காலத்தில் இவ்வரண் மனையினைச் சுற்றி இரு கோட்டை மதில்கள் இருந்துள்ளன, அவை (1) இராசேந்திர சோழன் மதில் (2) உள்படை வீட்டு மதில் குலோத்துங்க சோழன் கல்வெட்டிலிருந்து மேலும் ஒரு மதில் கட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது. அது ''குலோத்துங்க சோழன் திருமதில்'' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு வரும் வழியினை ''குலோத்துங்க சோழன் திருமதில் பெருவழி'' என்று கூறுகிறது. மேலும் பெருவழிகள் குறித்து கல்வெட்டிலிருந்து,

1. இராசராசன் பெருவழி

2. இராசேந்திரன் பெருவழி

3. விளாங்குடையான் பெருவழி

4. கூழையானை போன பெருவழி

தெரிய வருகிறது மற்றும் 'வேம்புகுடிவாசல்' என்ற வாயிலும் இருந்திருக்கிறது.

இவ்வரண்மனைக்கு கிழக்கே ஓடும் ஆற்றுக்கு 'மதுராந்தக வடவாறு' என்று பெயர் இருந்துள்ளது. (இன்றும் வடவாறு என்ற பெயரில் விளங்குகிறது)

மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டிலிருந்து ''தரணி சிந்தாமணி பெருந்தெரு'' என்றும், இராசேந்திர சோழன் காலத்தில் ''மும்முடி சோழப் பெருந்தெரு'' என்றும், ''முடிகொண்ட சோழன் மடிகை'' என்றும் வணிகத்தலங்கள் இருந்துள்ளன. மேலும் இரண்டாம் இராசேந்திரனின் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரத்து உள்ளாலை பெரிய அங்காடி, திருபுவன மாதேவிப் பேரங்காடி என இரு அங்காடிகள் இருந்துள்ளன.

திருவாரூர்க் கோயிலுக்கு இவ்வூரைச் சேர்ந்த உடையான் செய்யபாதம் என்பவன் ஒரு இரத்தின ஆரம் தானமாக அளித்துள்ளான்.

நன்னிலம் வட்டம் சோங்காலிபுரம் தந்துபீசுவரசுவாமி கோயிலைக் கற்றளியாக, செய்வித்தவன் இவ்வூரைச் சேர்ந்த சாலிகன் கௌதமன் ஆவான். இவன் உருவம் அக்கோயிலில் செதுக்கப்பட்டு அருகே கல்வெட்டில் ''ஸ்வஸ்திஸ்ரீ இக்கோயில் திருக்கற்றளித் திருப்பணி செய்வித்தான் கங்கை கொண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழப் பெருந்தெருவிலிருக்கும் சாலிகன் கௌதமன் தில்லைவன முடையான் அரியான்'' என வெட்டப்பட்டுள்ளது. சீர்காழி கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் இவ்வூரைச் சேர்ந்த 'வாமமாளிகை உடையான் வேம்பன் வைபிரியார் மகன் ஆரம்பூண்டான்' என்பவன் அளித்த தானத்தைப்பற்றி கூறுகிறது. சிவபுரி சிவன் கோயில் கல்வெட்டில், இவ்வூரைச் சேர்ந்த அரண்மனையில் திருமஞ்சனம் 'அட்டும்' பணி மகளிரில் ஒருத்தி நாட்டானம் என்பவள் பொன் தானமளித்துள்ளாள்.

**கல்வெட்டில் குளம், ஏரி, ஆறு, வாய்க்கால்:**

**குளம் :**

1) ..... ப்பாக்குளம் 2) மடாகுளம், 3) தித்தகுளம் என்று குளங்களும்

**வாய்க்கால் :**

1) அதிகை நாயன் வாய்க்கால்

2) சந்தன வாய்க்கால் என்று வாய்க்கால்களின் பெயர்களும்

**ஏரி :**

1. விசலூர் ஏரி

2. சிரங்குடி ஏரி ஆகிய ஏரிகளும்

**ஆறு :**

1. மதுராந்தக வடவாறு (இன்று வடவாறு என அழைக்கப்படுகிறது)

2. மருதாறு (அரியலூர் அருகே ஓடுகிறது) ஆகிய ஆறுகளும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அய்யனும், அண்ணலும் :**

இவ்வூர் வீரராசேந்திரனின் 5-ஆவது ஆட்சியாண்டு மிக நீண்ட கல்வெட்டில் தன் தந்தையான முதலாம் இராசேந்திர சோழன் ''பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன்'' என்றும் தன் தமையனான இராசாதிராசனை ''கல்யாணபுரமும், சொல்லாபுரமும் கொண்டு யானை மேல் துஞ்சின அண்ணல்'' என்றும் தந்தையை மிக மரியாதையாக 'அய்யன்' மற்றும் தமையனை 'அண்ணல்' எனவும் சிறப்பாக குறிப்பிடுகிறான்.

தந்தை 23-ஆவது ஆட்சியாண்டில் கொடுத்த தானத்தையும், தமையன் 26, 30-ஆவது ஆட்சியாண்டுகளில் கொடுத்த தானத்தையும், தான் கொடுத்த தானத்தையும் கல்வெட்டில் குறித்துள்ளான். எனவே முதலாம் இராசேந்திர சோழன் இப்பெருங்கோயிலை கி.பி.1035க்கு முன்னர் கட்டினான் என்பது தெளிவாகிறது. மேலும் நாட்டுப் பிரிவுகளும் ஊர்கள் பற்றியும், அரசு அதிகாரிகள் 64 பேர்கள் இருந்துள்ளதையும், இக்கோயிலுக்கு சுமார் 1,03,893 கலம் நெல் தானமாக அளித்துள்ளதும் தெரிகின்றது.

மேலும் இனம் வாரியாக சுடுகாடும் இருந்துள்ளது என்பது வெள்ளாந் சுடுகாடு, பறைச் சுடுகாடு என்பதிலிருந்து தெரிகிறது.

சோழ மன்னர்களேயன்றி, பாண்டிய மன்னர்களான ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன், மாறவர்மன் குலசேகரன் ஆகியோரும் இக் கோயிலுக்கு தானம் கொடுத்துள்ளனர்.

கி.பி. 1463-இல் வைப்பூர் திரு.வேங்கடமுடையான் ஏகாம்பரநாத காங்கேயன் என்பவன் அளித்த மடத்திற்கான தானம் குறித்தும், அறியமுடிகிறது.

**இருகுலமும் சிறக்க வந்த செல்வன் :**

கலிங்கத்துப் பரணியில் ஜெயங்கொண்டான் குலோத்துங்க சோழனை "இருகுலமும் சிறக்க வந்த செல்வனே" என்று சிறப்பித்துள்ளார். இதற்கு காரணம் முதலாம் இராசேந்திர சோழன் தன்மகளான அம்மங்காதேவியை கீழைச் சாளுக்கிய அரசனான இராசராசநரேந்திரனுக்கு மணம் முடித்து கொடுக்க, அவர்களுக்கு பிறந்தவனே முதலாம் குலோத்துங்க சோழன் ஆவான். இவனையே செயங்கொண்டார் இருகுலம் சிறக்க வந்தவன் என்று குறிப்பிடுகிறார். இவன் 55 ஆண்டுகள் பேரரசனாக முடிசூடி ஆட்சிப்புரிந்துள்ளான். விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ மன்னர்கள் மிக சிறப்புடன் அரசாட்சி புரிந்துள்ளனர்.

**சோழர் வீழ்ச்சியும் கங்கை கொண்ட சோழபுரம் மறைவும் :**

மூன்றாம் இராசேந்திர சோழனுக்கு பிறகு சோழர் ஆட்சி வீழ்ந்தது. பாண்டியர்கள் கங்கைகொண்ட சோழபுரத்தை கைப்பற்றி மாளிகையையும், ஊரையும் அழித்துள்ளனர். கோயிலுக்கு மட்டும் சுந்தர பாண்டியன் சந்தி, ராஜாக்கள் நாயகன்சந்தி, என்று சந்தி பூசைக்கு தானமாக ஊர்களைக் கொடுத்துள்ளனர்.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட இவ்வூர் கல்வெட்டில் வைப்பூர் திருவேங்கடமுடையான் ஏகாம்பரநாத காங்கேயன் என்பவன் ஏகாம்பரநாதன் மண்டபத்தில் அனைவரும் கூடியிருக்க இக்கோயிலுக்கு இராசேந்திர சோழன் திருவீதியில் உள்ள மனை தானமாக கொடுக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

கி.பி. 1483-இல் ஆண்ட மல்லிகார்ஜுன ராயரின் மகனான பிரவுட விருபாட்சனின் கல்வெட்டு உள்ளது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் இறைவரி கொடுத்த கோயில்களில் கங்கைகொண்ட சோழபுர கோயிலும் உண்டு.

கி.பி. 1756-இல் பிரெஞ்சு படையெடுப்பின் போதும், கி.பி. 1765-இல் ஆங்கிலேயர் உதவியோடு நவாப் படையெடுப்பின் போதும் இவ்வூரும் கோயிலும் மிகவும் பாதிக்கப்பட்டது.

கி.பி. 1855-ஆம் ஆண்டின் 'இந்தியன் ஆண்டிக்வரி' என்ற நூலில் கி.பி. 1836-இல் கொள்ளிட நதியில் அணைக் கட்டப்பட்டபோது (அணைக்கரை)

இக்கோயில் கற்கள் பொதுப் பணித் துறையினரால் கொண்டு செல்லப்பட்டு அணைக்கு பயன்படுத்தப்பட்டதாக குறிப்பு உள்ளது.

இவ்வாறு கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் மிகவும் ஓங்கி உயர்ந்து விளங்கிய கங்கை கொண்ட சோழபுரம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு தொடங்கி மெல்ல மெல்ல வீழ்ச்சியுற்று கி.பி. 19-இல் மிகச் சிறிய கிராமமாக விளங்கியது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினரால் 1980 தொடங்கி இவ்வூரில் 5 முறை அகழாய்வுப் பணி மேற்கொண்டு இவ்வரண்மனையின் அடித்தளப் பகுதியினை வெளிக்கொணர்ந்து உலகறிய செய்து, அவ்வகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களைக் கொண்டு அங்கே ஓர் அகழ்வைப்பகம் வைக்கப்பட்டு உள்ளது.

''அண்டம் ஓர் அணுவாம் பெருமை கொண்டணு ஓர் அண்டமாம்'' என்று கருவூர்த் தேவர் இவ்வூர் பதிக திருவிசைப்பாவில் கூறியதற்கிணங்க ஒரு காலத்தில் அண்டம் (உலகம்) வியக்கும் வண்ணம் வளர்ந்து பின்னாளில் அணு அளவு சிறிய கிரகமாக ஆகியது என்றால் நம்பமுடியவில்லை என்பதே உண்மையாகும்.

# கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வு

முன்னுரை

கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு

- அ) இலக்கியம் வழிவரலாறு
- ஆ) கல்வெட்டுகள் கூறும் செய்திகள்
- இ) இராசேந்திர சோழன்
- ஈ) கங்கைகொண்ட சோழபுரம் கோயில்
- உ) அரண்மனை அமைப்பு

2. மேற்பரப்பாய்வு மற்றும் அகழாய்வுகள்

- அ) அகழாய்வுக் குழிகள்
- ஆ) சுவர்ப் பகுதிகள்
- இ) மண்மலை கோட்டைச் சுவர் ஆய்வு
- ஈ) சோழகங்கம் ஏரிப் பகுதி ஆய்வு

3) பானை ஓடுகள்

- அ) மத்திய காலப் பானைகள்
- ஆ) சீன நாட்டுப் பானை ஓடுகள்

4) தொல்பொருட்கள்

- அ) சுடுமண் பொருட்கள்
- ஆ) இரும்பு பொருட்கள்
- இ) வேலைப்பாடுகளுடன் கூடிய தொல்பொருட்கள்
- ஈ) கூரை ஓடுகள்

# அகழாய்வுப் பணி – 1980 முதல் 1996 வரை

கங்கை கொண்ட சோழபுரம் மாளிகைமேடு என்ற பகுதியில் 4 x 4மீ என்ற அளவில் தொல்லியல் விதிகளின்படி முறையான அகழாய்வுப் பணி மையப்பகுதியில் துவக்கப்பட்டது. முதல் குழியிலேயே 'T' என்ற ஆங்கில எழுத்து வடிவில் ஓர் கட்டிடப்பகுதி 1.65 மீ ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கட்டடத்தின் தடிப்பு 1.10மீ ஆகும். இந்த கட்டிடம் கிழக்கு மேற்காகவும் பின் தெற்கு வடக்காகவும் 'T' என்ற வடிவத்தில் இவ்வகழ்வுக் குழியில் தென்பட்டது.

இதனைத் தொடர்ந்து கட்டடத்தின் ஒரு பகுதி கிடைக்கப்பெற்றதால் அக்குழியை மையமாக கொண்டு நான்கு திசைகளிலும் அகன்ற பரப்பளவில் (Grid System) முறையில் அகழாய்வை விரிவுபடுத்தி சுமார் 25 குழிகள் மாளிகைமேட்டில் மட்டும் பல்வேறு பருவங்களில் போடப்பட்டு இங்கு காணப்பட்ட மறைந்து விட்ட மாளிகையின் அடித்தளப் பகுதியைச் சிறிது சிறிதாக வெளிக் கொணரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து பெரும்பாலான அகழ்வுக் குழிகளில் செங்கற்கட்டிடப் பகுதிகள் தொடர்ந்து செல்வதை அறிந்து அகழாய்வை மேலும் விரிவுபடுத்தியும் முழுமையான கண்டறிதல் பொருட்டும் பணி தொடரப்பட்டது. ஆய்வில் பெரும்பகுதியான கட்டிடப்பகுதிகள் வெளிக் கொணரப்பட்டன.

இங்கு காணப்பட்ட செங்கற் கட்டிடப் பகுதியானது சுட்ட செங்கற்களைக் கொண்டும் ஒரே அளவினைக் கொண்ட செங்கற்களையும் பயன்படுத்தி கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடப் பகுதிகளுக்கு இடையே கருங்கற்களும் அதன் மையப் பகுதியில் ஒரு குழியும் காணப்படுகிறது. இவை தூண்கள் பொருத்த பயன்படுத்தப்பட்ட கற்பலகைகளாக இருத்தல் வேண்டும் என அறிய முடிந்தது. இது போன்ற கற்கள் சதுரமாகவும் நன்கு கனத்துடனும் கிடைத்துள்ளது. இந்த கருங்கற்கள் சுவரின் மேல் தளத்தில் காரைப் பூச்சுடன் ஒட்டியே காணப்படுவதால் இதுவே தரைப் பகுதியாக கருத இடமளிக்கிறது. இந்த கற்கள் 65 x 60 x 30 செமீ அளவினை உடையதாகவும் 1.75 மீட்டர் இடைவெளி விடப்பட்டு கற்கள் பொறுத்தப்பட்டுள்ளன.

எனவே இந்த கற்கள் தூண்கள் நிறுத்த பயன்படுத்தப்பட்டவையே என்பது உறுதியாகின்றது. மேலும் இந்த கருங்கல்லை ஒட்டியவாறு சிதைந்த நிலையில் மக்கிய வாறு மரத்தூண் ஒன்று கிடைமட்டமாக அகழாய்வில் வெளிக்கொணரப்

பட்டது. எனவே தூண்கள் நிறைந்த மண்டபமாக இவை இருந்திருக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கட்டடப்பகுதியின் கட்டுமான அமைப்பு :**

இங்கு அகழாய்வில் வெளிக் கொணர்ந்த செங்கற் கட்டிட கட்டுமானம் சிறப்பிற்குரியது ஆகும். இவற்றில் ஒரு கல் செங்கற்கல்லின் தலைப்பகுதி வெளிப்புறம் நிலையிலும் அடுத்த வரிசை செங்கற்கல்லின் உடல்பகுதி தெரியும் நிலையிலும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி கட்டப்பட்டுள்ளது. இவ்வாறு கட்டிடம் கட்டும் முறையை Header and Structure Method என்று குறிப்பர். இதுபோன்ற கட்டிட முறை கட்டிடத்தின் உறுதிக்கும், இடிபாடுகள் நேராமல் தடுக்கவும், விரிசல்கள் ஏற்படா வண்ணம் இருக்கவும் கட்டப்படும் கட்டிடமுறையாகும். செங்கற்களை ஒன்றோடு ஒன்று இணைப்பதற்கு (Binding Material) கலவைப்பூச்சு களிமண் சாறுடன் மூலிகைச் சாறு வெல்லப்பாகு கடுக்காய்ச்சாறு கலந்து தயாரிக்கப்பட்டிருக்கலாம். இதனை பிற்கால இலக்கியமான மதுரைக் கோயில் திருப்பணி மாலையில் காணப்படும் பாடல் மூலம் அறியலாம்.

மதுரைக் கோயில் திருப்பணி மாலை பாடலில்

.... காரை

*யோடு சீரணம் அகற்றி*
*அரைத்த சுண்ணாம்பை வெல்லச் சாறு விட்டுநன்*
*றாய்க் குழைத்துச் செங்கலும்*
*அடுக்காப் பரப்பிக் கடுக்காயொடு ஆமலகம்*
*அரிய தான்றிக்காய் உழுந்து*
*ஒருக்கால் இருக்கால் இடித்து நன்னீரினில்*
*ஊரிய கடுஞ்சாறும் விட்டு*
*ஊழிக்காலங்களில் அசையாத வச்சிரக்*
*காரை விட்டோங்கும்*

- திருப்பணிமாலை

இப்பாடலில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாயினும் பொதுவாக கட்டிடங்கள் கட்டப் பயன்படுத்தப்படும் பொருட்கள், மற்றும் கட்டிடங்கள் உறுதியாக இருக்கத் தேவையான சுண்ணாம்பில் சேர்க்கப்பட்ட கலவைப் பொருட்கள் பற்றித் தெரிவிக்கின்றது. குறிப்பாக சுண்ணாம்பில் வெல்லச் சாற்றினை விட்டு அதனை அடுக்கப்பட்டச் செங்கல் மீது பரப்பியச் செய்தி

அறியப்படுகின்றது. மேலும் கடுக்காய், நெல்லிக்காய், அரிய தான்றிக்காய், உழுந்து ஆகியவற்றை ஒருமுறைக்கு இருமுறை இடித்து நல்ல நீரில் ஊறவைத்த கடுஞ்சாற்றினை விட்டு உறுதியாகச் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

இச் செங்கற் சுவரின் மேல்தளப் பகுதியில் அதாவது தரைப் பகுதியில் காரைப்பூச்சு காணப்படுகின்றது. இவற்றையும் முறையாக சிறிது சிறிதாக வெளிக் கொணரப்பட்டது. இவை சரியாக சமமாக 1.65 மீ ஆழத்தில் ஒரே சீராக அனைத்து குழிகளிலும் காணப்பட்டதால் மாளிகைப் பகுதியின் தரைப்பகுதி 1.65 மீ ஆழத்தில் காணப்படுவதே தரைப்பகுதி என முடிவு செய்யப்பட்டது. இத்தரைப் பகுதியில் 4 முதல் 9 அடுக்குகள் வரை காரைப்பூச்சுகள் காணப்பட்டது. இவை புணரமைப்பின் போது கொடுக்கப்பட்டவையாக கருதலாம்.

செங்கற்களின் மொத்தம் மேலிருந்து 14 வரிசை அடுக்கப்பட்டு பின் கீழே செல்ல செல்ல 9 செ.மீ ஒவ்வொரு புறமும் தடித்து செல்கின்றது. இவற்றின் அடிப்படையில் இறுதியில் அடித்தளத்தில் செங்கற்சுவரின் தடுப்பு 18 செ.மீ அதிகரித்து 1.28 ஆகவும் மேல் பகுதியில் 1.10 எனவும் அமைந்துள்ளதை உணர முடிந்தது.

அடித்தளத்தை அமைக்க செங்கற்களை, நன்கு படுக்கவைத்த நிலையில் அமைத்து அதற்கு கீழே மணலையும் கொட்டி சமன் செய்து மஞ்சள் நிற களிமண் கொண்டு தரையை போடப்பட்டு பின்னர் செங்கற் சுவரை சரியான அளவீட்டு முறையில நேராக அடுக்கி கட்டப்பட்டுள்ளது. மொத்தம் 37 வரிசை செங்கற்கள் அடித்தளத்தில் இருந்து தரைப்பகுதிவரை உள்ளது என கணக்கிடப்பட்டது.

இங்கு பயன்படுத்தப்பட்ட செங்கல்லின் அளவு முறையே நீளம் 24.5 செ.மீ அகலம் 13.5 தடிமன் 6 செ.மீ. ஆகும்.

**செங்கற் சுவரின் அமைப்பு :**

அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட செங்கற் கட்டடப்பகுதிகள் முழுவதும் வெளிக் கொணர இயலாமற் போனது. ஏனெனில் இப்பகுதி மக்கள் இங்குள்ள செங்கற்களைப் பறித்து தங்களது சொந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்தி விட்டதால் முழுமையான சுவரின் பகுதியை அறிய முடியவில்லை.

அகழாய்வில் வெளிக்கொணரப்பட்ட செங்கற் சுவர்களை மட்டும் கொண்டு ஆய்வு மேற்கொள்ளும் பொழுது இங்கு கட்டப்பட்ட செங்கற் சுவர்களின் அமைப்பு மிகவும் சிறந்த தொழில் நுட்ப முறையில்

கட்டப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இங்கு இரண்டு சுவர்கள் இணைந்து செல்வதை காணலாம். ஒரு சுவரின் தடிப்பு 1.10 மீ அடுத்து 55 செ.மீ இடைவெளி விடப்பட்டு பின்னர் மீண்டும் 1.10 மீ தடிப்புள்ள அடுத்த சுவர் இவை இரண்டும் 2.60 மீ இடைவெளி விட்டு மீண்டும் இரட்டைச் சுவர் அமைப்பில் இணைந்து செல்கின்றது. எனவே ஒரு பக்கம் சுவரின் தடிப்பு 1.10+0.55+1.10 = மொத்தம் 2.75 மீ தடிப்புள்ள சுவர் 2.50 மீ இடைவெளிவிட்டு மீண்டும் ஓர் இரட்டை சுவர் அமைப்பு என அதன் மொத்த நீளம் அகழாய்வில் வெளிக் கொணர்ந்தது 16.50 மீ ஆகும். இவை தென்வடமாக செல்கின்றது. கிழக்கு பகுதியிலும் இதே போன்ற இரட்டைச் சுவர் அமைப்பு செல்வதையும் அகழாய்வில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இரண்டு இரட்டைச் சுவர்களுக்கு இடைப்பட்ட தூரமும் 16.50 மீ ஆகும். இவை கட்டடத்தின் பல மாடிகளை அமைத்து கட்டுவதற்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது என்பதை உணரலாம். இங்கு காணப்படும் ஒரு சில சுவர்கள் இந்த அமைப்போடு ஒன்றவில்லையெனினும் செங்கற்கள் ஒரே அளவினதாக இருப்பதால் சமகாலத்தில் ஏற்பட்ட மாற்றமாக இதனைக் கருதலாம்.

# மண் அடுக்குகள்

மாளிகைமேடு அகழ்வுக் குழிகளில் அதிகமான மண் அடுக்குகளை காண இயலவில்லை. இரண்டு அல்லது மூன்று மண் அடுக்குகளே காணப்படுகின்றது. இங்கு தோண்டு குழிகள் அதிக அளவில் உள்ளது. பொதுவாக இங்கு சோழர்கால கட்டிட அமைப்பும், அதன் தொடர்புள்ள தொல்பொருட்கள் மட்டுமே மாளிகைமேடு அகழாய்வுக் குழிகளில் கிடைத்துள்ளது. இங்கு காணப்படும் மண்ணடுக்குகளின் அமைப்பைக் காண்போம்.

1. மண் அடுக்குகளில் முதலில் காணப்படும் மண் அடுக்கில் மண் மிகவும் கடினமாகவும், சிவப்பு நிறத்துடனும், களிமண் கலந்தும், செங்கற் துண்டுகள் நிறைந்தும் காணப்பட்டது. இவை தோண்டுவதற்கு மிகவும் கடினமாக காணப்பட்டது.

2. இரண்டாவது மண் அடுக்கில் மண் மிகவும் எளிமையாகவும் அதிக அளவு செங்கற் துண்டுகளும், பானை ஓடுகளும், உடைந்த கட்டிடப் பகுதிகள் பலவும் கலந்து இம்மண்ணடுக்கில் காணப்பட்டது. அதிக அளவில் செங்கற்களும், சில முழுமையாகவும், சிதைந்தும் கிடைப்பதை காண முடிந்தது. ஒரு மஞ்கள் நிற வண்ண களிமண் ஆங்காங்கே கலந்து காணப்பட்டது.

3. இம்மண்ணடுக்கில் மஞ்சள் நிற களிமண் போன்ற அமைப்பு தொடர்ந்து நேர்கோட்டில் முழுவதும் காண முடிந்தது. இந்த மண்ணடுக்கு இங்குள்ள எல்லா குழிகளிலும் பெரும்பாலும் காணப்பட்டது. இந்த மஞ்சள் நிற வண்ணத்தை ஒட்டியே காரைப்பூச்சும், கட்டிடப்பகுதியின் மேல் தரைப்பகுதியும் செல்கின்றது. 1.65 மீ ஆழத்தில் மாளிகை மேட்டில் இதுபோன்ற களிமண் மண்ணடுக்கு செல்கின்றது. இதன் தடிப்பு 20 செ.மீ அளவு உள்ளது.

இந்த மூன்று மண் அடுக்களின் கீழே இயற்கை மண்ணின் அமைப்பு கட்டிடச் சுவர்களின் கீழே செல்கின்றது. அவை மணல் கலந்த நிலையில் காணப்படுகின்றது.

இங்கு அமைக்கப்பட்ட தரைப்பகுதியின் கீழ் ஒரு சுவருக்கும் மற்றொரு சுவருக்கும் இடையில் செங்கற்களை தரையில் அடுக்கி வைத்து பரவலாக பாவப்பட்டு அதன் மீது மஞ்சள் நிற களிமண் பூச்சு பூசப்படுகின்றது. பின்னர் அந்த கடினமான களிமண் பூச்சின் மேல் மண், உடைந்த செங்கற் துண்டுகள் பிறவற்றை

கொட்டி அதன்மீது மீண்டும் அந்த மஞ்சள் வண்ண களிமண் பூச்சு அளித்து அந்த மஞ்சள் நிற களிமண் பூச்சின் மீது சுண்ணாம்பு காரைப் பூச்சு அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் கூர்ந்து கவனிக்கப்படும் பொழுது புதியதாக கட்டப்படும் கட்டிடப்பகுதியில் எவ்வித பழைய கட்டிடச் சிதறல்களும் அதன் அடித்தளத்தில் இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் மாளிகைமேட்டில் தரைப்பூச்சு, காரையின் கீழே உடைந்த காரைத் துண்டுகள், செங்கற் துண்டுகள் நிறைந்து காணப்படுகின்றது. எனவே இதனடிப்படையில் இந்த கட்டிடம் இராசேந்திர சோழனுக்குப் பின்னர் வந்து அரசு புரிந்தவர்கள் மாற்றி புணரமைத்த கட்டிடப் பகுதியாகவே இதனை கருத முடிகின்றது. ஆனால் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள செங்கற்கள் ஒரே அளவினையுடையதும், கட்டுமான அமைப்பு எவ்வித மாற்றமில்லாமல் காணப்படுகின்றது.

கோயில் கட்டுமானத்தில் அடித்தளத்தில் இருந்து இரட்டைச் சுவர் அமைப்பில் அமைத்து மேலே செல்லச்செல்ல இவை ஒன்றாக இணைந்து செல்வதையும் இக்கட்டிடப்பகுதியோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இதன் அடித்தளங்களும் இரட்டைச் சுவர் அமைப்புடன் அடித்தளத்தில் இருந்து அமைக்கப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். எனவே கட்டுமான அடிப்படையிலும், செங்கற் சுவர்களின் அமைப்பிலும் இக்கட்டிடப் பகுதிகள் முதலாம் இராசேந்திர சோழன் காலத்தவை என்பதை உறுதிபடக் கூறலாம். பின்னர் அவர்கள் வழிவழிவந்த அரசர்கள் இவ்விடத்தை புணரமைத்துள்ளதையும், விரிவுபடுத்தியதையும் மண்ணடுக்குகள் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

**செங்கற்கள் :**

1980 முதல் 1996 வரை மேற்கொண்ட அகழாய்வுகளில் மாளிகைமேட்டில் இதுவரை நான்குவிதமான செங்கற்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. அவையாவன (1) 24.5 x 13.5 x 6 செ.மீ. (2) 23 x 11 x 5 செ.மீ (3) 20 x 10.5 x 3 செ.மீ. (4) 19 x 14.5 x 4.5 செ.மீ மேற்குறித்த அளவுகளில் செங்கற்கள் சேகரிக்கப்பட்டது. இவற்றில் முதலிரண்டு அளவுகள் கொண்ட செங்கற்கள் அடித்தளம் கட்டும் சுவர்களுக்கு தலைப்பகுதிக்கு ஒரு கல்லும், உடல் பகுதிக்கு வைக்கும் பொழுது சிறிய கற்களையும் அடுக்கி கட்டியுள்ளனர். இவ்வாறு அமைக்கும் பொழுது சிறியகற்கள் 1 செ.மீ உயரம் குறைந்து காணப்படுவதால் கட்டிடம் நன்கு வலிமையாகவும், செங்கற்கள் உடையாமலும் கட்டிடத்திற்கு பழுது நேராமல் காக்கும் தன்மையை பெறும் என இப்படி அமைத்திருக்க வேண்டும்.

அடுத்த இரண்டு செங்கற்களும் உடைந்த கட்டிடப் பகுதிகளில் காரைப் பூச்சுடன் காணப்பட்டது. இதுபோன்ற இடிபாடடைந்த கட்டிடப் பகுதிகளும்,

அகழாய்வில் வெளிக் கொணரப்பட்டது. அவற்றில் முழுமையான செங்கற்கள் வைத்து காரைப்பூச்சு பூசிய நிலையில் இவை காண முடிந்தது. இவற்றில் சிறிய செங்கற்கள் வெளிப்புறச் சுவருக்கும் மேல் தளங்கள் அமைக்கவும் பயன்படுத்தியிருக்கக் கூடும். செங்கற்களை அடுக்கி அதன் மீது சுண்ணாம்பு காரைப் பூச்சு பூசப்பட்டுள்ளது. இரண்டு சுவர்கள் சேரும் முக்கோண கூர்முனைப் பகுதியில் கூரை ஓடுகளை வைத்து அதன்மீது காரைப்பூச்சுகளைப் பூசியுள்ளதையும் காரைப்பூச்சுடன் கிடைத்த கூரை ஓடுகள் கொண்டு யூகித்து உணரலாம்.

**உடைந்த கட்டிடப் பகுதிகள் :**

அகழாய்வில் சுமார் 1 மீட்டர் நீளமுள்ள அளவிற்கு உடைந்த கட்டிடப் பகுதிகள் வெளிக்கொணரப்பட்டது. இங்கு கிடைத்துள்ள கட்டிடப் பகுதிகளை ஒப்பு நோக்கும் பொழுது மூன்றுவிதமான பகுதிகளாக அவை பிரிக்கப்பட்டன.

1. செங்கற்களை படுக்கை முறையில் கிடைமட்டமாக அடுக்கப்பட்டு அதன்மீது காரைப்பூச்சு செய்யப்பட்டு பின்னர் இரண்டு புறமும் காரைப்பூசப்பட்டு கட்டப்பட்ட ஒன்று, இவை கட்டிடங்களுக்குள்ளே எழுப்பப்பட்ட தடுப்பு சுவர்களாக இருக்கலாம்.

2. அடுத்து செங்கற்சுவர் அமைப்பில் வரிசையாக செங்கற்களை கிடைமட்டமாக வைத்து காரைப்பூச்சு பூசப்பட்டு பின்னர் அந்த காரைப்பூச்சுக்கு மேலே மணல், சிறிய கூழாங்கற்கள் இவற்றை கலந்து அந்த காரைப்பூச்சு மேல் அடுத்த வரிசையாக இவற்றை வைத்து பின்னர் அதன் மேலே வழவழப்பான சுண்ணாம்பு காரைச் சாந்தை சன்னமாக கொடுத்துள்ளனர். இவை எளிதில் உடைக்க இயலாத அளவு மிகவும் கடினமான உள்ளது. சுண்ணாம்பு காரை, கூழாங்கற்கள், காரைப்பூச்சு, செங்கற்கள் அடுத்து சுண்ணாம்பு காரை என ஐந்து அடுக்குகள் கொடுக்கப்பட்டு நன்கு தடிப்பான நிலையில் காணப்படுகின்றது. இவை மாளிகையின் வெளிப்புறச் சுவராக இருத்தல் வேண்டும் என அகழாய்வாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

3. அடுத்து சில கட்டிடப் பகுதிகள் கூரை ஓடுகள் அடுக்கப்பட்டும் அதன் கீழ் காரைப்பூச்சு கொடுக்கப்பட்டும் பின்னர் சிறிய செங்கற்களை அடுக்கி சமமான சுண்ணாம்பு காரைப்பூச்சு பூசி வழவழப்பாக அமைத்துள்ளனர். இதுபோன்ற உடைந்த கட்டிடப் பகுதிகளும் அதிக அளவில் கிடைத்துள்ளது. இவை தடிப்பில் சிறிய அளவினதாக காணப்படுவதால் இவை ஒரு கட்டிடத்திற்கும் அடுத்த அடுக்கு கட்டிடத்திற்கும் இடையே கொடுக்கப் பட்ட தளப்பகுதியாக (ceiling) அல்லது கட்டிடத்தின் மேலே எழுப்பப்பட்ட சுற்றுப்புற சுவர்களாகவும் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

# மண்மலை அகழாய்வு

மாளிகைமேடு பகுதிகளில் மேற்கொண்ட அகழாய்வுகளுடன் கங்கை கொண்ட சோழபுரம் சுற்றுப்புற பகுதிகளிலும் அகழாய்வை மேற்கொண்டு கங்கை கொண்ட சோழன் மாளிகை மற்றும் பிற பகுதிகள் எவ்வாறு இருந்தன என்பதை கண்டறிவதில் தீவிரமாக செயல்பட்டு மண்மலை, கல்குளம், சின்ன மாளிகைமேடு, குருவாலப்பர் கோயில், 2009 இல் கங்கை கொண்ட சோழபுரம், இடைக்கட்டு, சின்ன மாளிகைமேடு போன்ற பகுதிகளிலும் குருவாலப்பர் கோயில் அருகே காணப்படும் அகழியை ஒட்டிய மேட்டுப் பகுதியையும் ஆய்வு மேற்கொண்டு பல அரிய செய்திகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. அவ்வகழாய்வுகளையும் அதன் வெளிப்பாட்டையும் இங்கு காணலாம்.

**மண்மலை அகழாய்வு :**

கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றி அமைந்துள்ள ஊர்கள் அனைத்தும் மேற்பரப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அழகர்மலை வடக்கே இருந்து கிழக்கே செங்கமேடு, மெய்க்காவல் புத்தூர், சுண்ணாம்புக்குழி, மண்மலை, ஆயுதக்களம், இடைக்கட்டு, கடாரங்கொண்டான் என ஒரு சுற்று வடகிழக்கு தென்திசை மற்றும் மேற்கு என சுற்றுப்புறத்தையும் அங்கு காணப்பட்ட மண்மேடுகளையும் ஆய்வு செய்த பொழுது மண்மேடு மலைபோல் குவிந்து காணப்பட்டது. பெயருக்கு ஏற்ப மண்மலை மிகவும் உயரமாக அமைந்திருந்தது. இதன் மேல் பகுதியில் மையப் பகுதியைத் தெரிவு செய்து அகழ்வுக்குழி ஒன்று 4 x 4 மீ அளவில் போடப்பட்டது. இங்கு அதிக அளவு உடைந்த செங்கற் துண்டுகளும், பானை ஓடுகளும் காணப்பட்டது. இம்மண்மலை சுமார் 2.00 மீ உயரம் பரந்து காணப்பட்டது. இம்மண்மலை அருகிலேயே பொருள் காத்த துர்கை அம்மன் கோயிலும் உள்ளது. இங்கு காணப்படும் மகிஷாசுர மர்த்தினி கலிங்க நாட்டுச் சிற்பம் ஆகும். இந்த மண்மலையில் அதிக அளவு பொன்னும் பொருளும் குவிந்து காணப்படுவதால் அம்மன் அதனை காத்துக் கொண்டு அமர்ந்திருக்கின்றாள் என செவிவழிச் செய்திகள் அறிந்தோம். சோழர் கால பொக்கிஷங்கள் இங்கே புதையுண்டு உள்ளது என்றும் கூறுவர்.

மேற்பரப்பு ஆய்வு மேற்கொண்ட போது இங்கும் சோழர் கால கட்டிடப் பகுதிகள் இருக்க வாய்ப்புள்ளது என்ற நோக்கத்திற்காகவும் கங்கை கொண்ட சோழபுரம் எவ்வளவு பரந்து பட்டிருக்கின்றது என்பதை அறியவும் இங்கு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வில் 3.90 மீ. ஆழத்தில் செங்கற் கட்டிடப் பகுதியின் இரண்டு வரிசையும் அதனைத் தொடர்ந்து மஞ்சள் நிற களிமண் பகுதியும் காணப்பட்டது. எனவே கட்டிடம் இருப்பதை உணர்ந்து இதன் தொடர்ச்சியை அறிய இதன் கிழக்கு பகுதியில் மேலும் 4 x 4 மீ அளவில் ஓர் அகழ்வுக் குழி போடப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இங்கு 2.70 மீ ஆழத்தில் கட்டிடப் பகுதியும் அதிலிருந்து 9 வரிசை செங்கற் சுவர் அடுக்குகளும் வெளிக் கொணரப்பட்டது. இந்த கட்டிடத்தின் அடித்தளம் வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் செல்கின்றது. முழுமையான சுவர்ப் பகுதி காணப்படவில்லை. இப்பகுதியில் அதே 1.10 மீ தடிப்புள்ள செங்கற் கட்டிடப் பகுதி இருந்துள்ளது என்பதை தெளிவு படுத்தியது. கட்டிட அளவு, செங்கற்கள் கட்டுமான முறை அனைத்தும் மாளிகை மேட்டில் காணப்பட்ட செங்கற் சுவரினை ஒத்ததாகவே இருந்தது. எனவே மண்மலையில் காணப்பட்ட கட்டிடப் பகுதியும் சோழர்கால கட்டிடக் கலை என்பதும், கங்கை கொண்ட சோழபுரம் கோயிலைச் சுற்றிலும் நகரம் பெரும் அளவில் கட்டப்பட்டு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை இவை நமக்கு நன்குப் புலப்படுத்துகின்றது.

# கல்குளம் அகழாய்வு

மாளிகைமேட்டிற்கு வடகிழக்கே சற்று தொலைவில் ஒரு குளம் உள்ளது. இங்கு அதிக அளவு உடைந்த பானை ஓடுகளும், கூரை ஓடுகளும், செங்கற்துண்டுகளும் காணப்பட்டது. இவற்றுடன் உடைந்த கற்பலகைகள் மற்றும் செம்புராங் கற்கள் அதிக அளவில் குவிந்து காணப்படுவதால் இக்குளத்தை கல்குளம் என்றும் அழைக்கின்றனர்.

இப்பகுதியை மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டது. அவற்றின் உயர்ந்த மண் மேட்டின் பகுதியில் 4 x 6 மீ அளவில் ஓர் அகழ்வுக்குழி அமைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மண் கடினமாகவும் களிமண் நிறைந்தும் காணப்பட்டது. இவ்வகழ்வுக்குழியில் 2.60 மீ ஆழத்தில் கருங்கற்பலகை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அடுக்கி வைத்தது போன்ற அமைப்பு காணப்பட்டது. இப்பகுதியை அகழ்வுக் குழிகள் முழுவதும் சுத்தம் செய்து ஆய்வு செய்யப்பட்டது. கற்பலகைகள் ஒழுங்கற்ற வடிவில் இருந்ததாலும் செவ்வக அமைப்பில் ஒரே சீரான முறையில் குளத்தில் இருந்து வடக்கே தொடர்ச்சியாக செல்வதையும் அறியமுடிகிறது.

இங்கு காணப்பட்ட கற்பலகைகள் 85 x 40 செ.மீ நீள அகலத்தில் உள்ளது. இவற்றின் பக்கவாட்டில் அமைத்த பகுதிகள் செம்புராங் கற்களைப் போட்டு அப்பகுதியை கெட்டிப்படுத்தியுள்ளனர். நீர் செல்லும் பாதை வடக்கு தெற்காக அமைக்கப்பட்டது. இவற்றின் அமைப்பு கீழே கருங்கற்கள் சமதளமாக அடுக்கப்பட்டு இடையில் பாதை போன்று அமைத்து அதன் மீது ஒழுங்கற்ற கற்களை போட்டு நீர் கசிவு ஏற்படாவண்ணம் இந்த குழாய் பகுதியை அமைத்துள்ளதை அறியமுடிந்தது.

இந்த அமைப்பு சோழர் காலத்தில் குடியிருப்புகளுக்கு நீராதாரத்திற்காக இக்குளத்தில் இருந்து நீர் வடக்கே செல்வது போல அமைக்கப்பட்டுள்ளதையும், வடக்கு பகுதியிலும் குடியிருப்புகள் இருந்துள்ளது என்பதையும் இவ்வாய்வு தெளிவுபடுத்துகின்றது. மேலும் இங்கு வேறு எந்த காலத்தின் தடயங்களும் கிடைத்தில. சோழர்கள் கால கூரை ஓடுகள், பானை ஓடுகள், செம்புராங் கற்கள் இவைகள் மட்டுமே காணப்பட்டது. வேறு ஏதும் குறிப்பிடும்படியான தொல் பொருட்கள் கிடைத்தில. இதுபோன்ற சோழர் கால குடிநீர் வாய்க்கால் அமைப்பு முதன் முறையாக கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் தான் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தான் சோழகங்கம் எனும் பொன்னேரியின் மதகு அமைப்பையும் அதன் காலத்தையும் அறிய அங்கும் ஓர் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் சோழர் கால மதகு மற்றும் அதன் அமைப்பும், கட்டுமான முறையும் வெளிப்பட்டது.

# சோழகங்கம் மதகு (பொன்னேரி) அகழாய்வு

கங்கை கொண்ட சோழபுரம், ஜெயங்கொண்டம் சாலையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் மேற்கே அமைந்தது தான் சோழகங்கம் எனும் பொன்னேரி.

வடக்கே படை திரட்டிச் சென்ற முதலாம் இராசேந்திர சோழன் கங்கை நதியின் புனித நீரை எடுத்துவந்து பின்னர் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு பெரிய ஏரியை வெட்டினான். அந்த ஏரியில் என்றும் கங்கை போன்று நீர் வற்றாது செழிக்கவும், கங்கையைப் போன்று புனித நீராகவும் கருதவே தான் எடுத்துவந்த இந்த வெற்றியின் நினைவாக கங்கைப் புனித நீரை ஊற்றி "சோழகங்கம்" என்றும் குறித்துள்ளான் சோழ நாட்டின் கங்கையாக இது திகழ வேண்டும் என்றும் இப்பெயர் நாட்டி மகிழ்ந்தான். நீர்மயமான வெற்றிக்கு அமைத்த நினைவுச் சின்னமாக இப்பேரேரி திகழ்ந்தது. இக்குறிப்புகள் திருவாலங்காடு செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

இத்தகு சிறப்பு மிக்க ஏரியில் சில மதகுகள் காணப்படுகின்றன. ஆறு மதகுகள் அமைந்துள்ளது போன்ற அதன் அமைப்பு காணப்பட்டாலும் சிலவற்றைத்தான் நாம் இங்கு காண முடிகின்றது. இம்மதகுகளின் அமைப்பு அதன் காலம், கட்டுமானம் இவற்றை அறிய இப்பகுதியில் அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது.

சோழகங்கம் ஏரியில் இரண்டாவது மதகு என்று அழைக்கப்படும் பகுதியில் 7 x 4 மீ என்ற அளவில் அகழாய்வு குழி அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. 2.60 மீ ஆழம் வரை செல்லப்பட்டது. மண் மிகவும் கடினமாகவும் களிமண் கலந்தும் காணப்பட்டது. பானை ஓடுகள் செங்கற் துண்டுகள் மிகவும் குறைந்த அளவே காணமுடிந்தது.

மதகின் மேல் பகுதியில் செங்கற் கட்டிடம் அவற்றில் காரைப்பூச்சும், செங்கற்களும் இடையே சுண்ணாம்பு காரைப் பூச்சு காணப்பட்டது 2.60 மீ ஆழத்திற்கு அடுத்து செம்புராங் கற்கள் கொண்டு கட்டப்பட்ட தொட்டி போன்ற அமைப்பு ஒன்றினை வெளிக் கொணரப்பட்டது. இந்த தொட்டி நீள் செவ்வக வடிவில் காணமுடிந்தது. அதன் நீளம் 3.60 x 0.80 மீ அகலமும் உள்ளது. இதனை அடுத்து ஒரு செங்கற்கட்டிடம் காண முடிந்தது. இதன் நீளம் 1.45 மீ அகலம் 0.70 மீ ஆகும். இந்த செங்கற்கட்டிடத்தில் இரண்டு செங்கற்களுக்கு இடையே களிமண் பூச்சு மட்டுமே காணமுடிந்தது. இங்கு இரண்டு கற்களை இணைக்க பயன்படுத்தப்பட்ட (Binding Material) களிமண் சாந்து மிகவும் குறைந்த அளவே ஆகும்.

இந்த செங்கற்சுவர் அரைவட்டவடிவத்தில் மதகின் இருபுறமும் அமைந்து இந்த கட்டிடம் மேலே தொடர்ந்து செல்வதைக் காணமுடிந்தது. இந்த அரைவட்ட வடிவ அமைப்பில் இருந்த பகுதியும் கீழே காணப்பட்ட தொட்டியின் அமைப்பும் மட்டுமே சோழர் காலத்தவையாக தோன்றுகின்றது. அடுத்து காணப்படும் காரைப்பூச்சுடன் உள்ள செங்கற்சுவர் பிற்காலத்தில் எழுப்பப்பட்ட கட்டிடப்பகுதியாகும். எந்த ஒரு பகுதியும் காலப்போக்கில் பல மாற்றங்களுக்கு உள்ளாவது இயற்கையே. ஆனால் அதன் ஆரம்ப கால அமைப்பை உருவாக்கியவருக்கே அதன் பெருமை சேரும். அவ்வகையில் மதகின் மேல் பகுதி பலமாற்றங்கள் பெற்றிருப்பினும் அந்த மாற்றங்களுக்கு கீழே அடித்தளமும், ஆரம்பமும் சோழர் காலத்து கட்டிட அமைப்பின் மேலேயே உள்ளது. எனவே இந்த மதகு சோழர் காலத்தில் கட்டப்பட்டது என்பதும், பின்னர் வந்த அரச பரம்பரையினரும் ஆங்கிலேயரும் இம்மதகை பழுதுபார்த்து புதுப்பித்துள்ளனர் என்பதும் அகழாய்வில் உணரமுடிகின்றது.

சோழகங்கம் ஏரியின் மதகு பற்றி குறிப்பிட்டோம். அதன் அமைப்பு இரண்டு பக்கங்களிலும் வெளிப்படுத்தப்பட்டது. அவை அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டிருப்பதும் இரண்டு சுவர்களின் இடையே தொட்டி போன்ற அமைப்பும் உள்ளது என குறிப்பிட்டோம். இவை ஏரியின் நீர் கொள்ளளவு அதிகரிக்கும் பொழுது வெளியேறும் நீரின் அழுத்தம் அதிகரிக்கும். எனவே அந்த அழுத்தத்தைக் குறைக்கவே நீர் முதலில் தொட்டியில் விழுந்து பின்னர் மதகின் வழியே குறைந்த அழுத்தத்துடன் வெளியேற்றப்படுகின்றது. பக்கச் சுவர்கள் அரைவட்ட வடிவில் அமைத்தமைக்கும் இதுவேதான் காரணமாக இருத்தல் வேண்டும். நீரின் வேகம் தடுக்கப்பட்டு, நீர் தொட்டியில் விழுந்து பின்னர் வெளியேற்றப்படுதல் என்ற முறையில் அமைத்துள்ளது ஆய்வில் வெளிப்பட்டது.

நீரியல் வல்லுனர்கள் இக்கட்டிட அமைப்பைப் பார்த்து இக்கருத்தையே வலியுறுத்தினர். சோழகங்க மதகுக்கு மேல் பகுதியில் மராட்டியர் காலத்து கட்டிடப்பகுதியும், அதற்குமேல் ஆங்கிலேயர்களின் கால கட்டிட அமைப்பும் காணமுடிந்தது.

**அகழி**

**கோட்டை மதில் சுவர்:**

மாளிகைமேட்டின் வடபகுதியில் குருவாலப்பர் கோயில் என்ற ஊரின் தெற்குப் பகுதியில் ஓர் அகன்ற பள்ளமும் அதனை அடுத்து ஒரு மேடும் தொடர்ந்து செல்வதை ஆய்வில் காணமுடிந்தது. இதனைக் கோட்டையைச் சுற்றியிருந்த அகழிப்பகுதியாக இருந்திருக்கலாம் என்றும் இவ்வகழியை ஒட்டித்

தெற்குப் பக்கத்தில் கோட்டைச் சுவர் இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இங்கு மாதிரி அகழ்வுக்குழி தோண்டப்பட்டது. இங்கு கரடு முரடான செம்புறாங் கற்களால் அமைக்கப்பட்ட கோட்டைச் சுவர் பகுதி வெளிப்படுத்தப்பட்டது. இச்சுவர் இரண்டு பக்கமும் செம்புராங்கற்களை அடுக்கப்பட்டு நடுப்பகுதியில் செங்கற் துண்டுகள் மற்றும் மண் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது. இராசேந்திரன் காலத்து கோட்டையையும், அரண்மனையையும் இருக்கும் இடத்தை கண்டறியப்பட்டது. கோட்டை மதில்சுவர் 2.50 மீ தடிப்பும் உள்ளது. அண்மையில் 2009-இல் அகழாய்வு மேற்கொண்டு கோட்டை மதில் சுவர் எவ்வளவு தூரம் செல்கின்றது எங்கே முடிவடைகின்றது. நான்கு எல்லைப்புற கோட்டை மதில் சுவரை கண்டுபிடிக்கும்பணி முனைவர் தி.ஸ்ரீ.ஸ்ரீதர். இ.ஆ.ப., முதன்மை செயலர் (ம) ஆணையர், தொல்லியல் துறை அவர்களது தலைமையில் மிகவும் வேகமாக செயல்பட்டது. 50மீ இடைவெளி விடப்பட்டு 5 மீ x 4 மீ அளவில் அகழ்வுக் குழிகள் அகழி அருகே காணப்படும் மேட்டில் 3 இடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

முதலில் தற்பொழுது உட்கோட்டை செல்லும் பாதையில் கிழக்கே அமைத்த நீர்த்தொட்டியில் இருந்து 50 மீ. தொலைவில் இடைவெளி விட்டு போடப்பட்ட அகழ்வுக் குழிகளில் கோட்டை மதில் சுவரின் பெரும்பான்மையான பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டது. செம்புறாங் கற்கள் மட்டுமே பயன்படுத்தி இந்த அகன்ற கோட்டை மதில் சுவரை 2.50 மீ தடிப்பில் சுமார் 1 கி.மீ. தொலைவில் சென்று திரும்புகின்றது. இதே போன்று வடக்கு, மேற்கு பகுதிகளில் இவற்றின் எச்சங்கள் காணப்படுகின்றது. மேற்கே கடாரங்கொண்டான், இடைக்கட்டு வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு அதிக அளவு செம்புராங் கற்கள் குவியல் குவியலாக மண்ணோடு கலந்து காணப்பட்டதை அறிய முடிந்தது. இவை சிதிலமடைந்தமையால் முழுமையாக காண முடியவில்லை தெற்கு பகுதியில் முழுமையாக காண இயலவில்லை. கிழக்கு பகுதியில் விட்டுவிட்டு சுண்ணாம்பு குழி வரை இந்த செம்புறாங் கற்கள் காணப்படுகின்றது. அவற்றை உள்ளூர் மக்கள் பயன்படுத்தி கிணறு போன்றவற்றை கட்டிக் கொண்டுள்ளதையும் காணமுடிகின்றது. எனவே கோட்டை மதில் சுவர் வடக்குப் பகுதியில் மட்டும் ஓரளவு சுமார் கிழக்கு மேற்காக 1 கி.மீ. வரை செல்வதை அறியமுடிந்தது. இந்த கோட்டை 1 கி.மீ. சதுர பரப்பளவில் அமைத்திருக்க வேண்டும் என்பதை ஆய்வு மூலம் அறிய முடிந்தது.

# 2009 ஆம் ஆண்டு அகழாய்வுப் பணிகள்

2009-ஆம் ஆண்டு மேலும் பல புதிய தடயங்களையும், மாளிகைப் பகுதிகளையும் வெளிக் கொணரும் நோக்கோடு அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது. அவ்வகழாய்வில் அகழ்வுக்குழிகள் GKC-I, II, III மற்றும் IV என்று நான்கு குழிகளும், மாதிரிக் குழிகள் மூன்றும் போடப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**GKC-I :**

இவ்வகழ்வுக்குழி 4 x 4 மீ அளவில் மாளிகைமேட்டின் தெற்கே மாளிகையின் தொடர்ச்சியை அறிதல் வேண்டி ஓர் அகழ்வுக் குழி அமைக்கப்பட்டது. இவற்றில் மண் முதலில் கடினமாக இருந்தாலும் பின்னர் உடைந்த செங்கற் துண்டுகளும், காரைப்பூச்சுகளும், கூரை ஓடுகளும், பானை ஓடுகளும் கலந்து காணப்பட்டது. இங்கு அதிக அளவு மக்களால் இடையூறு செய்யப்பட்ட பகுதியாக காணப்பட்டது. இவை முன்னரே தோண்டப்பட்டு அங்குள்ள செங்கற் கட்டிடத்தில் உள்ள செங்கற்களை எடுத்துச் சென்றுள்ளனர் என்பதை தெரியப்படுத்துகின்றது. தோண்டு குழிகள் பெரிய அளவில் தெற்கு புற மண்ணடுக்கில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. இயற்கை மண் உள்ள அளவு ஆய்வு தொடரப்பட்டது. 2.90 மீ ஆழம் சென்றது. மஞ்சள் நிற களிமண் பகுதியே இப்பகுதி கன்னி மண்ணாகும்.

**GKC-II :**

கோட்டை மதில் சுவர் பகுதி இங்கு 7 வரிசை செம்புறாங் கற்கள் அடுக்கப்பட்ட நிலையில் 2.50 மீ தடிப்பில் கோட்டை மதில் சுவர் கிழக்கு மேற்காக செல்வதை 5 x 4 மீ என்ற அளவில் அகழ்வுக்குழி அமைத்து வெளிக் கொணரப்பட்டது. ஒழுங்கற்ற செம்புறாங்கற்கள் பண்டைய காலத்தில் பல கோயில்களிலும் கட்டப்பட்டதை இப்பகுதிகளில் காணலாம். இதனை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இங்கு கிடைத்த செம்புறாங்கற்கள் (Latari'te Stone) கொண்ட இந்த சுவரின் அமைப்பும் கோட்டையின் பாதுகாப்புச் சுவர்தான் என்பதை அறிந்து கொள்ள ஏதுவாக அமைந்தது. இப்பகுதியில் இதுபோன்ற கற்கள் கிடைப்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும். இச்சுவர் கிழக்கு மேற்காக சென்றிருத்தல் வேண்டும் தற்பொழுது இடையிடையே கற்கள் எடுக்கப் பட்டுள்ளதையும் காணமுடிந்தது.

**GKC-III :**

கோட்டை மதிற் சுவரின் கிழக்கு - மேற்காக செல்லும் இதன் நீளம் மற்றும் எந்த அளவில் சென்று திரும்புகின்றது என்பதையும் ஆய்வு மேற்கொண்டு கண்டறியப் பட்டது. குருவாலப்பர் கோயில் தெற்கே செல்லும் அகழி மேட்டின் தென்கிழக்கு முனையில் இந்த வளைவுப்பகுதியை கண்டறியப்பட்டது. இது நேராக சுண்ணாம்புக் குழிவரை செல்வதாக கொள்ளலாம். பெருமளவில் சிதிலமடைந்து விட்டது.

**GKC-IV :**

மாளிகைமேட்டில் உள்ள கிழக்குப் பக்கம் இரண்டு சுவர்கள் ஒன்றை அடுத்து ஒன்று நீளமாக செல்கின்றது. இதன் தொடர்ச்சி கண்டிப்பாக தெற்கு பகுதியிலும் தொடர வேண்டும் என கருதி தற்போது உள்ள மாளிகைமேட்டின் கட்டிடப் பகுதிகள் அகழ்ந்து வெளிக் கொணரப்பட்டதில் மேலே தொடர்ந்து தெற்கு பக்கம் 3 x 7 மீ அளவில் ஓர் அகழ்வுக்குழி அமைக்கப்பட்டது. இங்கு 40 செ.மீ மண் சுவர் தடிப்பாக செல்வதையும் அதன்மீது காரைப்பூச்சும் காணப்பட்டதையும் வெளிக்கொணரப்பட்டது. இந்த காரைப்பூச்சும் தொடர்ச்சியாக காணப்பட வில்லை. இருப்பினும் காரைப்பூச்சுகள் தடிப்பாக விட்டு விட்டு அகழ்வுக்குழிகளில் செல்வதை கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் காணமுடிந்தது. இவை மண்சுவரின் மீது வழங்கிய சுண்ணாம்பு காரைப்பூச்சு ஆகும். இதனைத் தொடர்ந்து செங்கற்கள் இப்பகுதியில் 40 செ.மீ ஆழத்தில் துவங்கி 9 வரிகள் செல்வதை வெளிக்கொணர முடிந்தது. இவை செங்கற்கள் அடுக்குமுறை, மற்றும் செங்கற்களை இணைக்க பயன்படுத்திய இணைப்புச் சாந்து ஆகியவை தெளிவாகவும், தடிப்பாகவும் வழங்கப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

எனவே இங்கு காணப்பட்ட சுவரின் அமைப்பு மிகவும் சிதிலமடைந்து காணப்பட்டது. தொடர்ச்சியாக தெற்கு பகுதியில் காணப்பட வில்லை. இந்த செங்கற்சுவர் பிற்காலத்தில் சோழர் காலத்திலேயே பின்னர் வந்த அரசர்கள் எடுப்பித்தவைகளாக இருக்கலாம் என அகழாய்வாளர்கள் கருதுகின்றனர்.

**மாதிரி அகழ்வுக்குழிகள் :**

இங்கு மாதிரி அகழ்வுக்குழிகள் போடப்பட்டது. 2 x 2 மீ மற்றும் 3 x 3 மீ 2.50 x 2.50மீ அளவுகளில் போடப்பட்டது. இவற்றிலும் உடைந்த செங்கற்துண்டுகளும், கூரை ஓடுகளும் மட்பாண்டங்களும் மட்டுமே சேகரிக்கப்பட்டன.

கட்டிடப்பகுதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் பொழுது மாளிகைமேட்டில் 1980 முதல் 1996 வரையிலும் மேற்கொண்ட அகழாய்விலும்

கட்டிடப்பகுதிகள் வெளிக் கொணரப்பட்டது. 2009-இல் மேற்கொண்ட அகழாய்விலும் GKC-IV என்ற தெற்கு பகுதியில் அமைந்த அகழ்வுக்குழியிலும் ஒரு கட்டிடப் பகுதி வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவை ஏற்கனவே சில இடங்களில் மாளிகைமேட்டில் அகழ்ந்த பொழுது கிடைத்ததைப் போன்று கடினமான மண்ணை கலந்து ஏற்படுத்திய மண்சுவர் இது. 40 செ.மீ தடிப்பும் பின்னர் இதன் கீழே செங்கற்சுவரும் காணப்படுவதை வெளிக்கொணரப்பட்டது. இங்கு காரைப்பூச்சும் வெளிக்கொணரப்பட்டது. இந்த கட்டிடப் பகுதி சற்று மாறுபட்டு அமைந்துள்ளது. இவை பின்னர் இக்கட்டிடத்தை புணரமைத்தோ அன்றி மாற்றி அமைக்கும் பொழுதோ அதன் தேவைக்கு ஏற்ப அதன் உயரத்தை மண் சுவர்கள் கொண்டு சரி செய்து பின்னர் காரைப்பூச்சு வழங்கியிருத்தல் கூடும் என தோன்றுகின்றது.

பொதுவாக இங்கு மேற்கொண்ட அகழாய்வுகளின் மூலம் மூன்று காலகட்டத்தைச் சார்ந்த கட்டிடப்பகுதிகள் இருந்திருக்கின்றது என்பது 2009-ஆம் ஆண்டு அகழாய்வும் மேலும் அதனை உறுதி செய்கின்றது என்பது போல வெளிக்கொணரப்பட்ட சுவரின் அமைப்பு உள்ளது.

முதலாம் இராசேந்திர சோழன் காலத்திற்கும் முற்பட்ட பகுதி, இராசேந்திர சோழன் காலத்துக் கட்டிடப்பகுதிகள், அவனுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட கட்டிடப்பகுதிகள்.

இராசேந்திர சோழன் காலத்திற்கு முன்னதாக கருதப்படும் கட்டிடப்பகுதிகள் முழுப்பகுதியும் அறியமுடியவில்லை. ஒருசில பகுதிகள் ஆங்காங்கே காணப்படுவதை கொண்டு உணரலாம். ஒரு சிறுபகுதி மட்டுமே காண முடிந்தது. ஆகவே அதன்கட்டிட அமைப்பு எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை யூகித்து உணரவே வாய்ப்புள்ளது.

ஆனால் இராசேந்திர சோழனால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட பகுதியில் பெரும்பகுதி வெளிக்கொணரப்பட்டது. அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட பகுதியை வைத்து பார்க்கும் பொழுது இங்கு காணப்படும் இரட்டைச் சுவர் அமைப்பு, இரண்டு சுவர்களுக்கு இடையே 55 செ.மீ. இடைவெளி, மேலும் இடைவெளிப் பகுதியில் மணல் நிரப்பியுள்ளதையும் கண்டோம். இங்கு தரைப்பகுதியிலிருந்த 14 வரிசை செங்கற்களும் அடுத்து ஒரு பக்கத்திற்கு 9. செ.மீ என இரண்டு பக்கமும் சேர்த்து 18 செ.மீ தடிப்பு அகலம் அதிகரித்து 15 வது செங்கற் வரிசையில் சுவரின் தடிப்பு 1.28 செ.மீ வீதம் 23 வரிசைகள் அடுக்கப்பட்டு கீழ் தளம் அமைத்துள்ளனர். செங்கற்கட்டிட அடித்தளத்தைச் சுற்றி கன்னிமண்

மேல் செங்கற்களை கிடைமட்டமாக அமைத்து களிமண் பூச்சு பூசப்பட்டு தரை அமைப்பு போன்று அடிப்பகுதி கட்டிடத்தை ஒட்டி அமைந்துள்ளது அடித்தளத்தை உறுதி செய்யும் நோக்கத்திற்காக என்பதையும் எளிதில் புரிந்து கொள்ளலாம். இதுபோன்று கட்டிடப் பகுதியில் 1.75 மீ இடைவெளியில் கருங்கற்களைக் கொண்டு தூண்கள் பொருத்தும் கற்பீடம் அமைத்துள்ளதும் கண்டோம். இதுவே முதலாம் இராசேந்திர சோழனின் கட்டடக்கலைப்பணி ஆகும். இதன் அமைப்பை கோயில் கருவறைச் சுவரையும் ஒப்பிட்டுப் பார்த்து உணரலாம்.

இராசேந்திர சோழனுக்குப் பிறகு எழுப்பப்பட்டவை. இக்கட்டிடப்பகுதி தரைப்பகுதியில் இருந்து சுமார் 45 செ.மீ உயரத்தில் இராசேந்திர சோழனின் கட்டிடப்பகுதியிலிருந்து மேலே கட்டப்பட்டுள்ளது. மண் சுவரின் அமைப்பையே இங்கு குறிப்பிடுகின்றோம். எனவே இதுபோன்ற கட்டிடப்பகுதிகள் கி.பி. 13-14-ஆம் நூற்றாண்டில் இதனை புணரமைக்கும் பொழுதோ அன்றி மாற்றி அமைத்த பொழுதே அமைத்திருக்கக் கூடும்.

இராசேந்திர சோழன் காலத்துக் கட்டிடப்பகுதியை வெளிப்படுத்திய பொழுது சில வண்ணம் தீட்டப்பட்ட காரைகள் கிடைத்துள்ளது. காரைகளில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறம் போன்றவைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இராசேந்திர சோழனது மாளிகை வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டு அழகு மாளிகையாக அவை விளங்கியிருக்க வேண்டும் என்பதே அதன் கருத்து.

இக்கட்டடத்தில் மேற்கூரை மர உத்திரங்கள் அமைக்கப்பட்டு அதன்மீது ஓடுகள் பாவப் பெற்று விளங்கியிருக்க வேண்டும். அத்தகைய காரைப்பூச்சுகளுடன் கூடிய ஓடுகள் பல அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்டது. அவைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கவும், கதவு போன்றவைகள் செப்புக்குமிழ் போன்ற இரும்பு, செம்பு பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்பதும் அங்கு கிடைக்கப்பெற்றுள்ள தொல்பொருட்களால் உணரமுடிகின்றது. இவ்வரண் மனையின் சில பகுதிகள் வேலைபாடுகள் மிகுந்த கற்கள், தந்தம், எலும்பு போன்றவற்றால் ஆன கலைப்பொருட்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது இங்கு கிடைத்த ஏராளமான அலங்கார தொல்பொருட்கள் தெளிவுபடுத்துகின்றது.

# தொல்பொருட்கள்

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் அதிக அளவில் தொல்பொருட்கள் சேகரிக்கப்பட்டது. அவைகளாவன.

1. இரும்பு பொருட்கள், ஆணிகள், கிளாம்ப் ஆணி, குமிழ் பொருத்திய அலங்கார ஆணிகள் போன்றவை.
2. செம்பு குறுவாள் கைப்பிடி, செம்பு தகட்டில் தாமரை இதழ்வடிவ அலங்காரப் பொருட்கள்.
3. கூரை ஓடுகள்
4. சீன தேசத்துப் பானை ஓடுகள்
5. அலங்கார கற்பொருட்கள்
6. சுடுமண் பொம்மைகள்
7. கண்ணாடிகள்
8. வளையல்கள்
9. மணிகள்
10. சுடுமண் கெண்டிமூக்கு
11. செங்கற்கள் (குறியீடுபதித்தவை)

**இரும்பு ஆணிகள் :**

தொல்பொருட்களாக இங்கு கிடைத்தவற்றில் இரும்பு ஆணிகளே முதன்மை இடத்தை பெருகின்றது. இங்கு 5 செ.மீ. ஆழம் அகழாய்வு மேற்கொண்டால் அரை கிலோ ஆணித்துண்டுகள் குவியும். இவை இந்த கட்டிடத்தில் அதிக அளவு மரங்களைப் பயன்படுத்தியமையை எடுத்துக் காட்டுகின்றது.

இங்கு இரண்டு வகையான இரும்புகள் கிடைத்துள்ளது. அவை மரச்சட்டத்தில் பயன்படுத்தப்படும் ஆணிகள் அடுத்து காரைப்பூச்சுக்களின் இடையே பயன்படுத்தப்படும் இரும்பு ஆணிகள். எஃகு இரும்பு மற்றும் வார்பு இரும்பு என இரண்டு வகையும் இங்கு பயன்படுத்தியுள்ளனர்.

மரச்சட்டங்களுக்கு எஃகு இரும்பையும், பிற இடங்களுக்கு வார்பு இரும்பையும் பயன்படுத்தியுள்ளனர். கிடைத்துள்ள ஆணிகள் 2 செ.மீ. முதல் 50 செ.மீ. நீளமுள்ளவை வரையிலும் கிடைத்துள்ளது. முழுமையான ஆணிகளும், பிடிப்பு ஆணிகளும், அதிக அளவில் கிடைத்துள்ளது. இத்தகைய ஆணிகள் இரண்டு பக்கமும் குமிழ் போன்ற தலைப்பகுதியும் சதுரமான பட்டை வடிவில் தட்டு போன்ற பகுதியும் இரண்டு பக்கமும் உள்ளது போல கிடைத்துள்ளது. அதிக அளவு இரும்புப் பொருட்கள் பல்வேறு வடிவில் கிடைத்துள்ளது. சோழர்கள் காலத்தில் கட்டிடங்களுக்கு அதிக அளவில் இரும்பு பயன்படுத்தப்பட்டதை இவ்வகழாய்வு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

**கூரை ஓடுகள் :**

அகழாய்வில் அடுத்து காணப்படும் அதிக அளவில் கிடைப்பதுமான கூரை ஓடுகளே ஆகும். இங்கு எங்கு பார்த்தாலும் பரந்த அளவில் மேற்பரப்பு ஆய்விலும் அகழாய்விலும் அதிக அளவில் ‘ட’ வடிவமைப்புடைய கூரை ஓடுகள் கிடைத்து வருகின்றது. இது போன்ற ‘ட’ வடிவமைப்பு சோழர்கள் காலத்தில்தான் தோன்றியுள்ளது. இதே போன்ற ஓடுகள் வேயப்படுவதை தில்லை நடராசர் கோயிலில் சிவகாமி சன்னதியில் காணப்படும் விதானத்தில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் கூரை ஓடுகள் வேயப்படுவதை வரைந்துள்ளனர் என்பதும் ஒப்பு நோக்கத்தக்கது ஆகும். சில காரைப்பூச்சுகளுடன், சில சுண்ணாம்பு காரைப்பூச்சு மரச்சட்டத்தின் படிவ அமைப்புடன் காணப்படுபவை போன்ற நிலையில் கூரை ஓடுகள் கிடைத்துள்ளமையால் இவை கூறைவேயப் பயன்படுத்தப்பட்ட ஓடுகள் என்பது உறுதியாகின்றது.

நீண்ட சதுர அமைப்பில் தலைப்பகுதியில் மாட்டுவதற்கு கொக்கி போன்ற அமைப்பில் இவை காணப்படுகின்றது. இதன் நீளம் 9 செ.மீ முதல் 26 செ.மீ நீளமுள்ளவை வரையில் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளது. அடிப்பகுதி அரை வட்ட வடிவம் அல்லது முக்கோண வடிவத்தில் அடுத்து அறுகோணவடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முக்கோண அமைப்பில் சில ஓடுகளில் கோடுகள் கொண்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவை வீட்டின் முகப்பு பகுதியில் பயன்படுத்தப்படும் கூரை ஓடுகளாக இருக்கலாம். மிகவும் சிறியதாக 9 செ.மீ. நீளமும் 4 செ.மீ. அகலமும் உடையவை சேகரிக்கப்பட்டுள்ளது. அறுகோண அமைப்புடைய ஓடுகள் பாம்பு படம் எடுப்பது போன்று காணப்படுகின்றது.

**சுடுமண் கெண்டி மூக்கு :**

சுடுமண்ணால் செய்யப்பட்ட கெண்டியின் மூக்குப் பகுதிகள் அதிக அளவு பல்வேறு வேலைப்பாடுகள் கொண்டவை, மாறுபட்ட வடிவில் கிடைத்துள்ளது.

இவை தலைப்பகுதி தாமரை இதழை போன்ற அமைப்பும், நடுவில் துவாரமும் அமைக்கப்பட்ட ஒன்று. இதுபோன்ற கெண்டி இறைவனுக்கு புனித நீர் எடுத்துவரவும், துறவிகள் கமண்டலமும், கெண்டியையும் வைத்திருப்பதையும் சிற்பங்களிலும், கல்வெட்டுச் செய்திகளில் குறிப்பதையும் காணலாம். அதுபோன்ற இந்த கெண்டி நாளடைவில் சோழர்கள் காலத்தில் அனைத்து வீடுகளிலும், அரண்மனைகளிலும் கெண்டி எனும் பாத்திரம் அதிக அளவில் பயன்பாட்டிற்கு வந்தது. இந்த கெண்டி அமைப்பு தனியாக அலங்காரமாக செய்யப்பட்டு சுடுவதற்கு முன்னர் பானைகளின் உடல் பகுதியில் பொருத்தியுள்ளனர். இவை பானையில் (அ) குடுவையில் உள்ள நீரை எளிதில் பயன்படுத்துவதற்கு உதவும் நிலையில் அமைந்துள்ளது எனவேதான் கெண்டியின் பயன்பாடு இவர்கள் காலத்தில் அதிகரித்துள்ளது.

**அலங்கரிக்கப்பட்ட கற் பொருட்கள் :**

கற்களில் அலங்கரிக்கப்பட்ட தொல்பொருட்கள் உடைந்த நிலையில் அதிக அளவில் கிடைத்துள்ளது. இவை அனைத்தும் மேல் பகுதி வட்ட வடிவிலும் வெளிப்பகுதி தாமரை இதழ் விரிந்த நிலை, மிருகங்களின் வாய்ப்பகுதி போன்றும், சிம்மம்தன் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவது போன்றும், பறவைகள் போன்றும், மனித தலைகள் போன்றும் பல்வேறு அலங்காரங்கள் கல்லில் செய்யப்பட்டு அதனை சுவரிலோ அல்லது இருக்கையாகவே பயன் படுத்தியுள்ளனர்.

இந்த அலங்கார கல் பொருட்கள் கால்பகுதி போன்ற மற்றும் உட்பகுதிகளிலேயே அதிக வேலைப்பாடுகள் காணப்படுவதால் இவை சுதை வேலைப்பாடுகளில் பொருத்தி வெளிப்புறம் தெரிவதுபோன்று அமைத்திருக்க வேண்டும் எனக் கருதமுடிகின்றது.

**அலங்காரப் பொருட்கள் (எலும்பு, தந்தம்) :**

இங்கு கிடைத்த தொல்பொருட்களில் மிகவும் நேர்த்தியாகவும் நுணுக்கமான வேலைப்பாடுடனும் காணப்படுபவை எலும்பினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்கள் மற்றும் தந்தத்தால் செய்த அலங்காரப் பொருட்களே ஆகும்.

இவற்றில் யாளி, சிங்கம், மற்றும் யானை போன்ற விலங்குகளின் உருவத்தை அழகிய முறையில் செதுக்கியுள்ளதை இப்பொருட்களைக் கொண்டு நாம் உணர முடிகின்றது. இங்கு கிடைத்தவற்றில் பிடரியின் அமைப்பும், அதன் கால்களும், அவற்றின் கண் பகுதியும் யாளியின் முக தோற்றமும் அழகுற வடிவமைக்கப் பட்டுள்ளது.

பிடரியில் காட்டப்பட்ட சுருள் சுருளான முடிக்கற்றைகள், கால்களில் அதன் பாதப் பிளவு, நகத்தின் அமைப்பு போன்றவை தெளிவாக செதுக்கப்பட்டுள்ளது. கண் அமைப்பு நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

இத்தகு அழகு மிக்க பொருட்களை, அழகிய உருவங்களை உருவாக்கி அவற்றை மன்னர்கள் பயன்படுத்தும் இருக்கைகள், கட்டில்கள், மேசைகள், கதவுகள், நிலவறை போன்ற பகுதிகளில் இவற்றைப் பதித்து அழகு படுத்தியுள்ளனர். இவற்றை சிறிய ஆணிகள் கொண்டு பதித்துள்ளமை ஆணியுடன் கிடைத்த அலங்காரப் பொருட்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

**கத்தியின் கைப்பிடி :**

கத்தியின் கைப்பிடி ஒன்று 1.37 மீ. ஆழத்தில் 15 செ.மீ. நீளமுள்ள நன்கு அலங்கரிக்கப்பட்ட குறுவாளின் கைப்பிடி ஒன்று சேகரிக்கப்பட்டது. இது மிகவும் சிறிய அமைப்பில் காணப்படுவதால் குறுவாளாக இருக்க வேண்டும்.

**வளையல்கள் :**

இவ்வகழாய்வில் அகழ்வுக்குழிகளில் 0.80 மீ. ஆழத்தில் இருந்து 2.50 மீ ஆழம் வரை நமக்கு வளையல் துண்டுகள் கிடைத்துள்ளது. இவற்றில் கருப்பு, மஞ்சள், நீலம் போன்ற வண்ணக் கண்ணாடி வளையல்களின் பகுதிகளும், சங்கு வளையல்களும் கிடைத்துள்ளது. சங்கு வளையல்கள் சில சாதாரண நிலையிலும் சில கோடுகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையிலும் கிடைத்துள்ளது.

அகழாய்வில் அதிக அளவு கருப்பு நிற மணிகளே சிறியதும் பெரியதுமாக கிடைத்துள்ளது. கருப்பு நிறம் அதிகமாக கிடைக்க சடங்குகளுக்காக போடப்பட்டவைகளாக இருக்கலாம் என்று யூகிக்க முடிகின்றது.

**மணிகள் :**

மணிகள் பல்வேறு வடிவில் விலையுயர்ந்த கற்களைக் கொண்டும் சில கண்ணாடி மணிகள், சில சோப்புக் கல் மணிகள் போன்றவைகள் கிடைத்துள்ளது. சங்கினால் ஆன மணிகள், காதணிகள் குறிப்பிடத்தக்கவை ஆகும். சங்கினால் ஆன நட்சத்திர வடிவ காதணியும் உருண்டையான கிரிஸ்டல் மணியும் சிறப்பானவை ஆகும்.

நீள் உருண்டை, வட்டவடிவம், ஒழுங்கற்ற வடிவம் என பல்வேறு வடிவில் கிடைத்துள்ளது. குறைந்த அளவே மணிகள் காணப்பட்டது.

# பானை ஓடுகள்

பானை ஓடுகளில் உள்நாட்டு பானை ஓடுகளும், அயல்நாட்டுப் பானை ஓடுகளும் கலந்து சேகரிக்கப்பட்டது. அவற்றில் உள்நாட்டுப் பானை ஓடுகள் இடைக்காலத்தைச் சார்ந்த பானை ஓடுகள் மட்டுமே கிடைத்துள்ளது. இவை கி.பி.11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை ஆகும். சிவப்பு, பளபளப்பான சிவப்பு நிற பானைகள், அலங்கரிக்கப்பட்ட பானைகள், கோடுகள் மற்றும் கைவிரல் மற்றும் நகங்களால் அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள் என பல்வேறு விதமான பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டது. விளம்புகள் தட்டையாகவும், உருண்டையாகவும், அகன்றும் வளைந்தும், கோடுகளால் அலங்கரிக்கப்பட்டும் காணப்படுகின்றது. நன்கு பளபளப்பான சிவப்பு நிற மட்பாண்டங்களும், சொரசொரப்பான பானை ஓடுகளும் அதிக அளவில் கிடைத்துள்ளது. குடம் அமைப்பு, குடுவை, கிண்ணம், தட்டு, போன்றவைகள் கிடைத்துள்ளது. மூக்கு அமைப்புடன் கூடிய பானைகள், உருண்டையான பானைகள் மத்திய காலத்திற்கு குறிப்பாக சோழர் காலத்தைச் சேர்ந்தவை அதிக அளவில் கிடைத்துள்ளது.

**சீன நாட்டுப் பானை ஓடுகள் :**

சோழர்கள் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே சீன தேசத்தோடு வணிக முறைத் தொடர்பை ஏற்படுத்தியிருந்துள்ளனர் என்பது பல செய்திகள் மூலம் அறிந்தோம். தற்பொழுது அகழாய்வுகள் மூலம் சோழர்களுடன் சீன நாட்டினர் வாணிபத் தொடர்பு கொண்டமைக்கு அவர்கள் நாட்டு மட்பாண்ட வகைகள் இங்கு கிடைத்துள்ளமை ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

**போர்சலைன் :**

சீன தேசத்தைச் சார்ந்த போர்சலைன் மற்றும் செலடைன் என்ற இரண்டு வகை பானை ஓடுகள் இங்கு அதிக அளவில் சேகரிக்கப்பட்டது. அவைகளாவன கிண்ணம், குடுவை, டம்ளர், தட்டு, குவளை போன்ற சிறிய வடிவமைப்புடைய போர்சலைன் மட்பாண்ட வகை அதிக அளவில் கிடைத்துள்ளது. இவற்றில் சிறிய சிறிய கோடுகள், பூ வேலைப்பாடுகள், வளைவுகள், இலை வடிவங்கள் என மெல்லிய கோடுகளால் அலங்காரம் செய்யப்பட்டு அதன் மீது உப்பு பூச்சு கொடுக்கப்பட்டு அதனை பளபளப்பாக மாற்றி அமைத்து பயன்படுத்தியுள்ளனர். உப்பு பூச்சு வழங்குவதும் மட்பாண்ட செய்முறைகளின் சிறந்த அறிவியல் அடிப்படையில் மேல் கொள்ளப்படுவது. இவற்றில் எவ்வித பொருட்களும் எளிதில் ஒட்டாது. எப்பொழுதும் பளபளப்பாகவும் வழவழப்பாகவும் இருக்கும்.

வெண்மையான களிமண் கொண்டு வளையப்படும் இதனை இட்சுவாங் வம்ச அரசன் காலத்தில் உருவாக்கப்பட்டது என்பர். வெள்ளை களிமண் கொண்டு செய்யப்படும் இந்த மட்பாண்ட வகை சீன தேசத்து போர்சலைன் மட்கலன்கள் என்பது சிறப்பானது ஆகும். இதனை ஆய்வு செய்த பேராசிரியர் கார்ஸ்வெல் என்பவர் சீன தேசத்து பானை ஓடுகள் என்றும் இதனை சுங்போர்சலைன் அல்லது சிங்பை ஓடுகள் என்றும் குறித்தார்.

**செலடைன் (CELEDAN) :**

இந்த வகை பானை ஓடுகளும் சீன தேசத்து பானை ஓடுகளின் வகையையே சாரும். இந்த ஓடுகள் ரோமானிய ஆம்போரா ஓடுகளின் அமைப்பில் காணப்படும் இதனை செலடைன் என்று குறிப்பர். இவற்றில் சாம்பல் நிறம், இளம்பச்சை நிறம், சிவப்பு நிறம் இந்த மூன்று வண்ணங்களில் கிடைத்துள்ளது. இவை பெரும்பாலும் அளவில் பெரியவை. ஜாடி, குவளை, பானை, குடுவை போன்ற சேமித்து வைக்கக்கூடிய பெரிய அளவில் அமைந்தவை. சில கைப்பிடி அமைப்புடன் கிடைத்துள்ளது. இவை நன்கு சுத்தமான பாசிநிற களிமண் கொண்டு செய்யப்பட்டு நன்கு சுடப்பட்டு அழகுற அமைத்த ஒன்று. இந்த வகை பானை ஓடுகளிலும் உப்புப் பூச்சு கொடுக்கப்பட்டுள்ளதை அறியமுடிந்தது. இந்த பூச்சு வழங்கப்பட்ட பானை ஓடுகள் ஒரு சிறிய இலையோடும் சன்னமான மண் அடுக்கு பானை ஓட்டின் மீது காணலாம். இந்த பூச்சு வழங்கிய பானை ஓடுகள் மிகவும் பளபளப்பாகவும் வழவழப்பான தன்மையும் அடைகின்றது. இந்த பானை வகைகளும் சீன தேசத்துப் பானை ஓட்டுவகைகயைச் சார்ந்தவைகளே. இவை தாணியங்கள் சேகரிக்கவும் இந்த உப்புப் பூச்சு வழங்கப்பட்ட பானைகளில் வைக்கப்படும் பொருட்கள் நீண்ட நாட்களுக்கு கெடுவதில்லை. மேலும் இதனை மண்ணில் புதைத்தால் மண்ணும் அரிப்பதில்லை. எனவே இத்தகு அறிவியல் நுட்பத்தை கண்டறிந்து பயன்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இந்த வகை செலடைன் மட்பாண்டங்களிலும் சுங் வம்சத்தினரால் அறிமுகப் படுத்தப்பட்டவையே ஆகும். கங்கை கொண்ட சோழபுரத்தில் அகழாய்விலும், மேற்பரப்பு ஆய்விலும், அதிக அளவில் செலடைன் பானை ஓடுகள் சில முழுமையான சிறிய குடுவை, பானை போன்றவைகளும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. அயல்நாட்டார் வருகையை அறுதியிட்டு கூற இதுபோன்ற அவர்கள் பயன்படுத்தி விட்டுச் சென்ற அவர்களது நாட்டு மட்பாண்ட வகைகள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**சுடுமண் பொம்மை :**

2009-ஆம் ஆண்டு நடைபெற்ற அகழாய்வில் சிறிய அளவிலான சுடுமண் கன்றுகுட்டி உருவம் உடைந்த நிலையில் GKC-I இல் 2.60 மீ. ஆழத்தில் சேகரிக்கப்பட்டது.

6.5 செ.மீ. நீளம் உடைய இதன் வாய்ப்பகுதி மற்றும் உடல் பகுதிகள் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. கால்கள் மட்டும் உடைந்த நிலையில் உள்ளது. இவை வளமைச் சடங்கின் அடிப்படையில் அமைத்த உருவ பொம்மை ஆகும்.

**காசு வார்பு (COIN MOULD)**

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் அதிக அளவில் கருப்பு நிறத்தில் காசு வார்க்கும் வார்பு சுடுமண் பொருளாக சேகரிக்கப்பட்டது. இவை பெரும்பாலும் உடைந்த நிலையிலேயே சேகரிக்கப்பட்டது. மேல்பக்கம் காசுகள் ஊற்றுவதற்கு ஏற்ப பள்ளம் பள்ளமாக அமைத்துள்ளனர். அடிப்பகுதி தட்டையாக தரையில் வைப்பதற்கு ஏற்ப காணப்படுகின்றது. இவற்றில் உருக்கிய பொருளை இந்த பள்ளத்தில் ஊற்றி காசின் அச்சுகளை இதன்மேல் பக்கம் பதிப்பர். பின்னர் அதனை எடுத்து சூடேற்றி பின்பக்கமும் அச்சினை குத்தியுள்ளனர். காசுகளுடன் இது போன்ற வார்புகள் கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

**தூண்கள் பொருத்தும் பீடம் :**

கருங்கற்களால் செதுக்கப்பட்ட கற்பீடம் 60 x 60 x 30 செ.மீ. அளவுகளில் ஏராளமான கற்பீடங்கள் இவ்வகழாய்வில் கிடைத்துள்ளது. இந்த கற்பீடங்கள் சதுரமாகவும், பருமனாகவும் செதுக்கப்பட்டுள்ளது. இவை செங்கற் சுவரின் மேல் பகுதியில் குறிப்பிட்ட இடைவெளியில் தொடர்ந்து செங்கற் சுவரின் மீது வரிசையாக காணப்படுகின்றது. இதன் நடுவே ஒரு பள்ளமான பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது. இவை இங்கே பொருத்தப்பட்ட கற்தூண்களின் அடிப்பகுதியோ அன்றி மரத்தூண்களின் அடிப்பகுதியையே இதன்மீது பொருத்துவர். இந்த கற்பலகையில் இருந்து கிடைமட்டமாக அழிந்த நிலையில் ஒரு மரத்தூணின் படிவம் அகழாய்வில் கிடைத்துள்ளது. எனவே இப்பகுதியில் இந்த கருங்கற் பலகையின் மேல் மரத்தூண்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என உறுதியாக கருதலாம். மேலும் சுமார் 33 கற்பீடங்கள் 500 ச.மீ. பரப்பளவில் மேற்கொண்ட அகழாய்வில் கிடைத்துள்ளதால் இப்பகுதி தூண்கள் நிறைந்த மண்டபமாக இருத்தல் வேண்டும் என கருத இடமளிக்கின்றது.

**வரைபடங்கள் : பானை ஓடுகள் :**

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் அதிக அளவில் கிடைத்த பானை ஓடுகள் சிவப்பு நிற பானை ஓடுகளே. இவற்றில் சில பளபளப்பாகவும், சில பானை ஓடுகள் அலங்கரிக்கப் பட்டவைகளாகவும் கிடைத்துள்ளது. இப்பானை ஓடுகள் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது பெரும்பாலான பானைகள் தடித்த விளிம்புடையவைகளாகவும் அகன்ற வாயுடையதாகவும், வெளிப்புறம் நீட்டிய தட்டையான விளிம்பு கொண்ட பானைகளே அதிகம். இந்த பானை ஓடுகள் சேமித்து வைக்கவே பயன் படுத்தியுள்ளனர். அடுத்து ஒரு பகுதியில் இருந்து அடுத்த பகுதிக்கு எடுத்துச் செல்லவும் இதுபோன்ற பானைகளை பயன்படுத்தி இருக்கவேண்டும்.

**சிவப்பு நிறப்பானை ஓடுகள் :**

1. தடிப்பான, வெளிப்புறம் நீண்ட விளிம்புடைய குவளை.
2. தடிப்பான, அரை வட்ட வடிவ விளிம்புடைய அகன்ற வாய் கொண்ட பானை.
3. தடித்த, அரை வட்ட வடிவ விளிம்புடைய அகன்ற வாயுடைய குவளை.
4. சிறிய உருண்டையான மணி போன்ற விளிம்புடைய அகன்ற வாய் கொண்ட பானை.

5,6. பானை மூடிகள்

7. தடித்த வெளிப்புறம் நீண்ட அரை வட்ட வடிவ விளிம்புடைய அகன்ற வாயுடன் கூடிய பானை.
8. தடித்த, வெளிப்புறம் நீட்சியுடைய, அகன்ற வாயுடைய பானை, கோடுகளால் அலங்கரிக்கப்பட்டவை.

**அலங்கரிக்கப்பட்ட பானை ஓடுகள் :**

1. தடித்த, அகன்ற வாயுடைய உருண்டையான அமைப்புடன் கூடிய விளிம்பு கொண்ட பானை இதன் தோல்பட்டையில் குச்சி கொண்டு அழுத்தம் செய்த குழிகளால் அலங்கரிக்கப்பட்டவை.
2. தடித்த, அகன்ற வாயுடைய பானை, இதன் விளிம்பு கோடுகளால் அலங்கரிக்கப்பட்டவை. தோல்பட்டையில் வட்டமான கோட்டில் புள்ளி வைத்தது போல வரிசையாக தோல்பட்டை முழுவதும் அலங்கரிக்கப்

பட்டவை. அடுத்து குச்சிகளைக் கொண்டு கோடுகள் போடப்பட்டு அழகு செய்யப்பட்ட பானை.

3. தடித்த, அகன்ற வாயுடைய சிவப்பு நிறப்பானை தோல்பட்டையில் ஒரு தடிப்பான அமைப்பில் நட்சத்திர அமைப்பில் அழகு செய்யப்பட்டு இவை முழுவதும் சுற்றி செல்வது போல அமைக்கப்பட்டுள்ளது.

4. தடித்த அகன்ற வாயுடைய பானை விளிம்பு முதல் தோல்பட்டைவரை கோடுகளால் அலங்கரிக்கப்பட்டவை. தோல்பட்டையின் இறுதி கோட்டில் முத்துக்களைப் போல உருண்டையான அமைப்பை குச்சி மூலம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

**கூரை ஓடுகள் :**

1. நீள் செவ்வக வடிவ கூரை ஓடு, தலைப் பகுதியில் 'ட' வடிவ அமைப்பும் கீழ்ப் பகுதியில் அரை வட்ட வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இவை சிறியதும் பெரியதுமாக நிறைந்த எண்ணிக்கையில் கிடைத்துள்ளது.

2. நீள் செவ்வகக் கூரை ஓடு வகையைச் சார்ந்தது. 'ட' வடிவ தலைப் பகுதி கொண்டது. அடிப்பகுதி முக்கோண வடிவில் அமையப்பெற்று அதில் முன்பக்கம் கோடுகளால் அலங்கரிக்கப்பட்டவை. இவை அரிதாகவே காணப்படுகின்றது.

3. எண்கோண வடிவ கூரை ஓடு தலைப் பகுதியில் சிறிய அளவில் 'ட' வடிவ அமைப்பும் எண்கோண அமைப்பும் கொண்டவை. இவையும் அரிதாக காணப்படுபவையே.

**குறியீடு பொறித்த செங்கல் :**

இவ்வகழாய்வில் கூட்டல் குறியீடு பதித்த செங்கற்கள் 2009-ஆம் ஆண்டு அகழ்வின்போதும் மேற்பரப்பு ஆய்வில் கண்டறியப்பட்டது. இவை கொத்தனார் அல்லது மேஸ்திரியின் குறிப்பிற்காக அமைக்கும் குறிகள் போலத் தோன்றுகின்றது. இதுபோன்ற செங்கற்கள் கங்கைகொண்ட சோழபுரத்தில்தான் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் செங்கற்களில் குறியீடு போடும் வழக்கமும் அப்பொழுது முதலே ஆரம்பமாகியிருத்தல் வேண்டும்.

# முடிவுரை

தென்னக வரலாற்றில் தலைசிறந்த நகராகத் திகழ்ந்தது, கங்கை கொண்ட சோழபுரம். இவ்வூரின் அருமை, பெருமைகளை, அக்கால இலக்கியங்களின் வாயிலாகவும், கல்வெட்டுகள், செப்பேடுகள் வாயிலாகத்தான் அறியமுடிகின்றது. சோழப் பேரரசு இருந்ததற்கானச் சான்றாக நிற்பவை அம்மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்கள்தான். அவர்கள் எங்கு வாழ்ந்திருந்தார்கள், அவர்களின் உறைவிடம் குறித்து கல்வெட்டுகளில் அறியப்பட்டாலும், அகழாய்வு மூலம்தான் சோழ மன்னர்களின் அரண்மனை கட்டிடப் பகுதிகளை அறியமுடிகின்றது.

கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட கட்டிடத்தின் அடித்தளத்தின் நீள, அகலங்களை பார்க்கும்போது, மாடி அமைப்பினைக் கொண்டதாக இருக்கக்கூடும் என்று தெரிகின்றது. கட்டிடங்களுக்கு இடையில் உள்ள இடைவெளியில் ஆற்று மணல் நிரப்பட்டுள்ளதால். கட்டிடத்தின் உட்புறம் குளிர்ச்சியாக இருக்க வழிவகைச் செய்யப்பட்டதோ எனத் தோன்றுகிறது. மேலும் தூண்கள் பொருத்தும் வகையில் ஒரே அளவில் வடிவமைக்கப்பட்ட கற்பலகைகள், தூண்களுடன் கூடிய மண்டபம் அல்லது, விளக்குகளைப் பொருத்தப் பயன்பட்டத்தூண் தாங்கிகளாக இருக்கக்கூடும். அகழாய்வில் கிடைத்த காரைப் பூச்சுகள் உட்புறச் சுவரில் சுண்ணாம்புக் கொண்டு நன்கு மெழுகப்பட்டு இருந்துள்ளதையும், உட்புறம் வண்ணங்கள் கொண்டு, ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கக் கூடும் என்றுத் தெரிகின்றது. சுவர்கள் முடியும் இடத்தில் கூரை ஓடுகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதும், கூரை விதானங்கள் அழகிய தாமரைப்பூ வடிவ வேலைப்பாடுகளுடன் அலங்கரிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதை இங்கு கிடைத்த கல்லால் ஆனப் பூ வேலைப்பாடுகளும், சிங்க முகம், மற்றும் பிற விலங்குகள் போன்ற முக அமைப்புகளுடன் கூடிய வேலைப்பாடுடைய கற்கள் மூலம் அறியமுடிகின்றது.

தந்த வேலைப்பாடுகள், எலும்புகளால் ஆன வேலைப்பாடுகளுடன் கூடியவைகள், மன்னர்களின் அரியனை, கட்டில்கள் மற்றும் பிற அன்றாடம் பயன்படுத்தப்பட்ட மரப் பொருட்களின் மீது பதித்திருக்கக்கூடும்.

அகழாய்வில் கிடைத்த மிகப்பெரிய இரும்பு ஆணிகள், சட்டத்துடன் கூடிய (Clarmped Item Nails) ஆகியவை மிகப்பெரிய கதவுகளுக்கோ, அல்லது மர உத்திரத்திலோ பொருத்தப்பட்டிருக்கக் கூடும்.

மிகப்பெரிய அளவிலான செங்கற்கள் மத்திய காலத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கற்களை நமக்கு எடுத்துக்கூறுபவைகளாக உள்ளது.

அகழாய்வில் கிடைத்த சீன நாட்டுப் பானை ஓடுகள் என போர்சலைன் (Porcelain) செலடன் (Celadon) பானை ஓடுகள், முதலாம் இராசேந்திர சோழன் கடாரம் (மலேசியா), ஸ்ரீவிஜயா (இந்தோனேஷியா) ஆகிய நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்பினை உறுதி செய்யும் வகையில், இந்நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததை அறியமுடிகின்றது.

சீர்மிகு சோழர்களின் தலைநகராக கங்கைகொண்ட சோழபுரம் திகழ்ந்ததையும் இங்கு சோழ வேந்தர்களின் அரண்மனை இருந்ததையும் இப்பகுதியில் நடத்தப்பட்ட அகழாய்வுகள் உறுதி செய்கின்றது.


மாளிகை மேடு - அகழாய்வு
மேற்கொண்ட பகுதி
கோட்டை - மாதரி வரைபடம்
N
S
E
W
CHENNAI
KUMBAKONAM NH
KUTE ROAD
Temple
Gangaikonda Chdeeswaram
KURUVALARPAR KOIL
KUMBAKONAM
கோட்டை மதில் சுவர்
MALIGAIMEDU
EXCAVATED SITES
MALIGAIMEDU
ULKOTTAI
JAYANKONDAM
EXCAVATED SITES
Cholagangam
Ponneri

# சோழகங்கம் ஏரி, மதகு அகழாய்வு
# CHOLA GANGAM LAKE EXCAVATIONS



# பானை ஓடுகளின் வகை





⑤



⑥



⑦



⑧



1, 2 DECORATED POT SHERDS



ROOF TILES



SEMI - CIRCLE

TRI ANGLE

HEXAG(

LID



⑨

T.C. LAMP



⑩




1, 2, 3, - TERRACOTTA KNOBS



PLUS SYMBOL
IMPRESSED
BRICK



T.C. CALF



IVORY HANDLE PORTION



DECORATED SHERD



STONE OBJECTS



DECORATED BONE OBJECTS

# BULLETIN
# DE
# l'École Française
## D'EXTRÊME-ORIENT

ÉCOLE FRANÇAISE D'EXTRÉME-ORIENT
**PARIS**

—

1987

## எசாலம் செப்புப்பட்டயம்





# TEXT OF ESALAM COPPER PLATES

## Sanskrit Text

### PLATE 1 SIDE A

1. स्वस्ति श्रीमल्ललाटे तिलकमिव वहन् चक्षु रुद्यन् विकासं क
2. ण्ठे सान्द्रेन्द्रनीलोत्पलमिव विदधत्कालकूटं करालं [।] मुण्डेन्दु[1]
3. मूर्ध्नि चूडामणिमिव कलयन्नित्य क्लृप्ताङ्गभूषा-शोभो दिश्यात् भवानीपरिणयनविधि
4. प्राप्तवान् धूर्जटिर्वः ॥[ १ ] पञ्चाशदेव लिपयो रविवंशजानां संख्याम
5. तीत्य भुवि भान्ति गुणा नृपाणां [।] एतैरमून् कथमहं कथयामि
6. देवि मातः सरस्वति ममात्र कुरु प्रसादम् ॥[ २ ] आसीदाद्यो नृपाणाम्
7. मनुरखिलजगच्चक्षुष स्सप्तसप्तेः इक्ष्वाकु स्तत्तनूजः प्रवरगु
8. णमणिश्रेणिजन्माम्बुराशिः । मान्धाता तस्य वंशे चतुरुदधिज
9. लमेखलालङ्कृताया पाता विश्वम्भरायाः क्षितिपतिमकुट श्रेणिवृन्दाङ्घ्रि[2]
10. पीठः ॥[ ३ ] तत्पुत्रो मुचुकुन्द इत्यजनि यः सद्यः प्रबोधान्मिषत् चक्षुर्दग्धविदग्ध
11. कालयवनानन्दमुकुन्दो नृप । तद्रूपाम्बुनिधेः शशी वल्लभ इत्याख्यां
12. दधानोऽभवद्यश्चक्रे वलभी पुरी नृपतिभिर्दोर्दण्डदण्डानतैः ॥[ ४ ] सकलजलधि

### PLATE 1 SIDE B

13. वीचीमेखलालङ्कृतायाः पतिरवनिगृबन्या भ्रांलवर्माग्र्यवंशे । नमद
14. खिलनरेन्द्रव्रातमौलिप्रभाभिः विरचित[3]चरणाब्जो वीर्यवा नाविरामीत् ॥[ ५ ] त
15. त्पुत्रोऽजनि राजकेसरिसमाख्यातो यशस्वी नृपः तत्सूनुः परकेसरी
16. रिपुनृपव्रातांघ्रि[4]कुम्भोद्भवः । आज्ञायं[5] आल जन्मनां क्षितिभुजान्तश्रामनि
17. प्रक्रमात् राज्ञां मौलिभिरानतैरनुदिनं मालेव संभाविता ॥[ ६ ] अरि
18. कालस्ततो जज्ञे करिकालसदन्वये । चक्रु र्यस्याज्ञया भूपाः
19. कावेरीतीरबन्धनम् ॥[ ७ ] समजनि विजयालयस्तदीये महति कु
20. ले महनीयराज्यलक्ष्मीः । अनुपमविभवप्रतापविद्याभुजबलवि
21. क्रमशौर्यधैर्यराशिः ॥[ ८ ] आदित्यवर्मा तनयस्तदीयो बुधाश्रयस्सन्धिष
22. णस्तरस्वी । दोषापनीतौ सततं प्रवृत्तस्सन्मार्गवर्ती क्षितिमभ्यरक्षत् ॥[ ९ ]
23. व्याघ्राग्रहारनिरतस्य पुरद्विषः प्राग् रूप्याचलाधिवसतेः कनकेन धा
24. म [।] चक्रे तदंघ्रिसरसीरुहषट्पदो यस्सोभूत्परान्तक इति प्रथि

1. स्व. 2. वन्या. 3. र. 4. ताब्धि. 5. यत्कुल.

## PLATE 2 SIDE A

25. नोऽस्य पुत्रः ॥[१०] बभूव तस्मात् गुणरत्न सिन्धो ररिन्दमो नाम यथार्थ
26. नामा। पुरान्तकांघ्रिद्वयपद्मभृङ्गः परान्तकोऽभूत्तनयस्तदीयः ॥[११] अजनि भु
27. जयुगेन प्रासदीर्घेण दीप्तां श्रियमखिलशरीराश्लेषिणी मादधानः।
28. असि[6]कर मथ रेखारूपिणी शङ्खचक्रौ दधदरूमौलिवर्म्मा तस्य सू
29. नुर्मुकुन्दः ॥[१२] गंगान् वंगान् कलिङ्गान् मगधविषयजान् माल
30. वान् सिंहलान्ध्रान्रट्टानोड्डान् कटाहान् समरविजयिनः
31. केरलान् गौडपाण्ड्यान्। जित्वा विश्वक्षितीशानजितसकल
32. धनै र्धाम तञ्जानगर्यां शम्भोरत्युत्तमं स व्यधित नरप
33. ती राजराजेश्वराख्यम् ॥[१३] तद्भ्राता करिकालचोलनृपति र्वीरश्रिया
34. लिंगितो हत्वा पाण्ड्यनरेन्द्रमाहवमुखे छित्त्वा तदीयं शिरः। तञ्जा
35. द्वारगतोन्दार्गलिरगि न्यस्योत्तमाङ्गं गिरां स्यान्नाम्भोनिधि
36. मेखलां वसुमतीं बालोस्यरक्षत् चिरम् ॥[१४] कलेर्बलात्प्रस्ख

## PLATE 2 SIDE B

37. लितं स्वशास्त्रमार्गं पुनः स्थापयितुं पृथिव्यां। सम्प्राप्तमाख्यामनुमेव य
